# கவியகம்

கவிஞர் வெள்ளியங்காட்டான்

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✸✸✸

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✸✸✸

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

[illegible] வெளியீடு

# கவியகம்

கவிஞர் வெள்ளியங்காட்டான்

நூல்
கவியகம் (கவிதைகள்)

முதற்பதிப்பு
2005 ஜூலை

ஆசிரியர்
வெள்ளியங்காட்டான்

உரிமை
வெ.இரா. நளினி

வெளியீடு
என். மகேந்திரன்
யதி வெளியீடு, அரசமர வீதி,
ஆவராம்பாளையம், கோவை - 641 006.
தொலை பேசி : 2561015

அச்சும் அமைப்பும்
திலகா ஆப்செட் பிரஸ்
169-ஏ, 6வது வீதி தொடர்ச்சி,
காந்திபுரம், கோவை - 641 012.
தொலை பேசி : 2523205

நூலின் அளவு : டெம்மி 1/8
தாள் : 8 K.G. மேப்லித்தோ

பக்கங்கள் : 168

படிகள் : 1000

விலை : ரூ.50/-


தமிழ் வளர்ச்சித் துறை
நிதி உதவியால் வெளியிடப்படுகிறது என்பதை
நன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

"பொருளுக்கு இரு தோற்றங்கள் உள்ளன. ஒன்று புறத் தோற்றம், இன்னொன்று அகத் தோற்றம். அகத் தோற்றத்திற்கு விளக்கம் அளிக்காத புறத்தோற்றத்தால் பயனில்லை. மனிதனுடைய அகவாழ்வைப் பிரதிபலிக்கும் அளவிற்குக் கலையும் சிறப்புப் பெறுகிறது."

*– மகாத்மா காந்தியடிகள்*

# பொருளடக்கம்


| | |
|---|---|
| பதிப்புரை | 5 |
| கவிஞன் நான் பேசுகிறேன் | 7 |
| முகவுரை | 9 |
| **முதலாவது : உறவுறல்** | |
| வாழ்த்து | 13 |
| கலைச்செல்வி | 15 |
| வைகறை | 17 |
| தழுவல் : வசந்தம் | 19 |
| கவிதை | 21 |
| எழில் மிகுந்த மாலை | 23 |
| மகிழ்ச்சி | 25 |
| உறவுறல் | 27 |
| எதிர்பார்த்தல் | 29 |
| தவிப்பு | 31 |
| வேட்பு | 33 |
| காதலி | 35 |
| பரவசம் | 55 |
| இன்பச்சிகரம் | 57 |
| **இரண்டாவது : அறிவுறல்** | |
| வாடகை வீடு | 60 |
| வலைக்குள் கலை | 63 |
| இதய வேட்கை | 66 |
| வரவழைப்பு | 69 |
| புடமிட்ட பொன் | 72 |
| மலையும் மயிலும் | 75 |
| ஏமாற்றம் | 78 |
| சொல்லும் செயலும் | 80 |
| அன்னையின் ஆணை | 90 |
| அறிவுறல் | 93 |
| கொண்டுணி | 95 |
| இரக்கம் | 97 |
| மாண்பு | 99 |
| பராக்கு | 101 |
| குறும்பு | 103 |
| போதனை | 105 |
| அவனும் அவளும் | 107 |
| விவசாயம் | 109 |
| மனமாற்றம் | 111 |
| பதற்றம் | 115 |
| துன்பமோ துன்பம் | 118 |
| நான் ஒரு குருவியானால் | 120 |
| குழந்தையைக் காணோம் | 122 |
| பிரிவு | 124 |
| தடுமாற்றம் | 126 |
| **மூன்றாவது : துறவுறல்** | |
| சிந்தாகுலம் | 129 |
| எழில்மலர் | 131 |
| புகழ் | 133 |
| எழு! | 135 |
| புறப்பாடு | 137 |
| உதவிகள் | 139 |
| புத்தகம் | 141 |
| நிறைமொழி | 143 |
| அமைதி | 157 |
| துறவுறல் | 159 |
| நிலைபேறு | 161 |
| **தனிப்பாடல்கள் :** | |
| இளைஞர் | 162 |
| இல்லறம் | 163 |
| காலத்தின் அருமை | 164 |
| அரிய பொருள் | 165 |



# பதிப்புரை...

"நீங்கள் நினைப்பதை சொல்லாவிட்டால், நீங்கள் நினைக்காததை சொல்லும் கட்டாயம் ஏற்படும்" என்ற ஆரி லீவின் வாழ்வியல் சிந்தனை யாவற்றிற்கும் பொருத்தமாக அமைகிறது. இலக்கியப் பதிவும் அப்படித்தான். அவை காலத்தே மக்களிடம் சென்றடையாவிட்டால் பிற்போக்கான கருத்தியல் சமூகத்தில் வேரூன்றிவிடும்.

கவிஞர் வெள்ளியங்காட்டான் அவர்கள், தனது படைப்புகள் அனைத்தும் பதிப்பிக்கப்பட்டும், புதுப்பிக்கப்பட்டும் தமிழ் மக்களிடம் சென்றடைய வேண்டும் என்ற கனவு இறுதி மூச்சு வரை மெய்ப்படாமல் போனது. கவிஞர் மறைந்து பதினான்கு ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. இந்த நீண்ட இடைவெளியில் நூலாக்க முயற்சி என்பது விழலுக்கு இரைத்த நீரானது, இருப்பினும் அதற்கான காலம் இப்போதுதான் கனிந்து வந்திருக்கிறது.

கவிஞர் இலக்கியத்தை வெறும் பொழுது போக்காக எப்போதும் கருதியதில்லை. சுவாசமாகக் கருதியவர். இலக்கியம் சமூகத்தின் மனசாட்சியாகவும், மனித குலத்தின் ஆன்மாகவும் இருக்கிறது என்ற கருத்தியலோடு வாழ்ந்தவர். கவிஞரின் அனைத்துப் படைப்புகளையும் தொடர்ச்சியாகத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு வழங்க இருக்கிறோம்.

வெள்ளியங்காட்டான்


"கவிஞர் வெள்ளியங்காட்டான் கவிதைகள்" தொகுப்பைத் தொடர்ந்து எங்களது யதி வெளியீட்டுக் குழுமத்தின் இரண்டாவது படைப்பாக "கவியகம்" கவிதை நூலை வெளியிடுவதில் மகிழ்கிறோம்.

இந்நூலை சிறப்பாக கொண்டு வருவதற்கு அனைத்து வகையிலும் உதவி புரிந்த நண்பர்களுக்கும், பிழை திருத்தம் செய்துதவிய கவிஞர் புவியரசு அவர்களுக்கும், பாவலர் இரணியன் அவர்களுக்கும், மிகுந்த ஈடுபாட்டுடன் கவிஞரின் கவிதைகளைத் தொகுத்தும், அச்சுப்பணிக்கும் உறுதுணையாயிருந்த கவிஞர் தங்க. முருகேசன் அவர்களுக்கும், மிகக் குறைந்த காலத்தில் அழகிய முறையில் அச்சிட்டு வழங்கிய திலகா ஆப்செட் பிரஸ் வேனில் கிருஷ்ணமூர்த்தி மற்றும் அச்சகத் தோழர்களுக்கும் பகிர்ந்தால் குறையாத நன்றிப் பூக்களை உரித்தாக்குகிறேன்.

அன்புடன்

என். மகேந்திரன்

யதி வெளியீடு



# கவிஞன் நான் பேசுகிறேன்

'என் காவியங்களே என் வாழ்க்கை.
என் வாழ்க்கையே என் எழுத்து
என்னைப் பற்றிச் சொல்வதற்கு
என் இலக்கியங்கள் உயிர்வாழ்தல் மட்டுமே!"

இதற்குமேலும் என்னைப் பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது, என்ன இருக்க முடியும்?

உடல், உயிர், உள்ளம் இம்மூன்றும் வாழ்வின், உன்னதமான குறிக்கோளை வாழ்வாகக் கொண்டு, உண்மையைப் பின்பற்றி வாழ்ந்தாக வேண்டும் என்பதைத் தவிர?

கவி. கலீல் கிப்ரான் ஒரு உண்மையான ஆற்றல் சால் பெருங்கவிஞன். கவிதா உலகில் அவன் என்றென்றும் ஒளிவீசும் நிறைமதி போன்றவன். இவ்வுலகில் நின்று நிலவும் எல்லா மொழிகளிலும், அவனுடைய குரல் ஓங்கி ஒலித்து, மந்திரச் சொற்களாய் புகுந்து, மக்களின் உள்ளங்களைச் செப்பனிடச் செய்யும் என நான் உறுதியாக நம்புகிறேன். அந்த அளவே விரும்பவும் செய்கிறேன். அவரது இறுதி நாட்களில் அந்தக் கவியகம் பீரிட்டு வெளிபடுத்திய ஆழமான குரல்...!

ஓ...! என் மரணமே! வா...! வந்தென்னை தழுவிக் கொள். என் உயிர் உன் வருகையை எதிர்பார்த்து ஏங்கிக் காத்துக் கொண்டிருக்கிறது வா... வா...! விரைந்து வந்து இந்தச் சடப் பொருள்களின் வலிய பிடியிலிருந்து என்னை விடுவித்து விடு! ஏனெனில் நாணிங்கு ஒரு தேவ தூதனாக வந்தேன். தேவ மொழியில் உரையாடினேன். என் அர்த்தமுள்ள அற்புதமான மொழி இவர்களுக்குப்

புரியாமல் போயிற்று. இவர்கள் என்னைப் புறக்கணித்து விட்டனர். முற்றும் மறந்து விட்டனர். காரணம் - இவர்களைப் போல், செல்வத்தின் பால் ஆசை கொண்டு பலவீனமானவர்களைத் தோலுரித்து பணம் சேர்த்துக் கொள்ளவில்லை. ஆதலால் ஓ... மரணமே மக்களுக்குத் தேவையற்ற நான் உனக்கும் வேண்டப்படாதவன் ஆவேனோ?

உன் இதயத்தில் என்பால் அன்பென்றும் அழுது ததும்பி வழிந்து கொண்டிருக்கிறது, வா...! விரைந்து வந்து என்னை ஆரத் தழுவிக் கொள். உன் அணைப்பில் என் அமைதியான உறக்கம் ஆரம்பமாகட்டும்.

என் அன்னையின் இனிய முத்தங்களின் சுகத்தை நான் அறிந்தேனில்லை. ஒரு சகோதரின் உச்சியை முகர்ந்தேனில்லை. ஒரு மனைவியின் அன்பில், காதலில் மூழ்கித்திளைத்தேனில்லை. ஓ...! என் இனிய மரணமே! இவை அனைத்துமான மகிழ்ச்சிக்குரிய என் அருமை நண்பனே, வா... விரைந்து வா... உன் தாலாட்டில் நான் உறங்கவேண்டும்.

இந்த மாபெரும் கவிஞனின் 'தீர்க்கதரிசி' என்னும் நூலிலிருந்து ஒரு சிறுபகுதியை நான் எடுத்துக் கொண்டிருக்கிறேன். அதை வெண்பாக்களாக இயற்றி இந்த சிறு தொகுப்பில் சேர்த்துள்ளேன். இது ஒரு குறையாகவோ குற்றமாகவோ தமிழ்கூறு நல்லுகம் கருதாது என்றும் நம்புகிறேன்.

கலீல் ஜிப்ரான் கவிதையில் ஒப்பற்ற இமயம்; நான் ஒரு சிறிய குன்று; ஆனால், ஏறக்குறைய நானும் அவருடைய அதே நிலையில்தான் இருக்கிறேன்; தெளிந்த உள்ளத்துடனும், அச்சமற்ற நிலையிலும் அமைதியுடனும் என் வாழ்நாள் இறுதியை நோக்கிச் சென்று கொண்டுள்ளது. மனித நேயமிக்க மனிதனாக, ஒரு உண்மை கவிஞனாக வாழ்ந்த வாழ்வை நினைத்து நிறைவான இதயத்தோடு, என் பயணம் தொடரும்.

வெள்ளியங்காட்டான்



# முகவுரை

சத்தியத்தின் பாதை என்னவோ மிகக் கடினமானது தான். ஆயினும் கவிஞன் அதைக் கடந்து செல்லத் தயங்குவதில்லை. பொய்மை எனும் இருட்டு அவனின் எழுத்து என்னும் இதயத்தைக் கொன்றுவிடும். ஆதலால் தான் அவன் சத்தியம் என்னும் விளக்கை உடன் எடுத்துச் செல்ல வேண்டியுள்ளது.

'தென்றலிலே நிலவுகலந் திடுத லொப்போ?
திருக்குறளில் வாழ்வுகலந் திடுத லொப்போ?
மன்றலிலே முல்லைகலந் திடுத லொப்போ?
மதுரவிசை தமிழில்கலந் திடுத லொப்போ?'

கவிஞன் ஒப்பு நோக்குகிறான் தீர்மானிக்க முடியாமல் -

நாட்டினிலே ஊரூராய் திரியும் துன்பம்
நல்லவர்கள் யாரெனவே தேடும் துன்பம்
ஏட்டினிலே பொருளுணர்ந்து தேர்ச்சி யெய்ய
இரவினிலே கண்விழித்து கற்கும் துன்பம்
வீட்டினிலே மூட்டை யெனும் பூச்சியாலே
விளைகின்ற துன்பத்துக் கிணை யாகாதே!

உலகில் கவிஞனுக்குள்ள எத்தனையோ துன்பங்களில் இது மிகப் பெரும் துன்பமாக

வெறும் கற்பனை என்பது காகிதப் பூக்களாக, அழகுள்ளதாக, மனம் கவர்வதாக இருக்கலாம். ஆனால், அனுபவம் என்னும் உண்மையால் மூட்டைப் பூச்சியின் கடியை கூட உயிரோட்டமாக கவிதையில் கூற முடிகிறது.

ஒரு கவிஞன், மகளுக்கு தீபாவளி பரிசாக, "நான் உனக்குக் கொடுப்பது ஒரு மேதையின் இரவல் வாக்கியமே. அதை மறவாது மனதில்வை! ''பிறர் தவறுகளை தேடிப் பார்க்காதே. உன் தவறுகளைத் தேடிப் பார். அதை அறிந்து களைந்தெறி அதுவே உன் துன்பங்களுக்கெல்லாம் தீர்வாகும்" என்கிறார்.

கவிச்சக்ரவர்த்தி ரவீந்திரர்:

''அவன் என்னை ஏசுகிறான் என்றால், அதைத் திரும்பச் செய்ய என்னால் முடியாது. ஏனெனில், நான் புகழ முடியாத ஒருவனை எவ்வாறு நான் இகழ முடியும்?'' எனக் கேள்வி எழுப்புகிறார்.

சிறுவயதில் தாய், பின் முதல் குழந்தை, கணவன் என இறந்தவர்கள் அனைவரும் மறக்கப்பட்டு விட்ட போதும். எனக்கு வறுமையை மட்டுமே பரிசாகக் கொடுத்த தந்தை, நெஞ்சில் நீங்கா இடம்பெற்று விட்டது ஏன்?

நினைவிலேயே நெகிழும் இதயம். கலங்கும் உள்ளம் கண்ணீர் சொரியும் கண்கள் என, கவிஞன் செத்தும் என்னை சொந்தமாக்கிக் கொள்ள வைத்தது எது?

கவித்துவம்...! அது... சாகாவரம் பெற்றது. அது, என்றும் வாழும் நிலை பெற்றது.

கவிச்சக்கரவர்த்தி ரவீந்திரர் சொல்கிறார்.

"உன் காலிலே விழுகிறேன் சரத்பாபு
ஒரு கதை எழுத வேண்டும் நீ -
ஒரு சாதாரணப் பெண்ணின் கதை
குறைந்தது ஆறேழு அசாதரணப் பெண்களுடன்
போட்டி போடும் நிர்பந்தம்
அந்த அதிஷ்டக் கட்டைக்கு...!
அப்படியும்
எனக்காக
அவளை வெற்றி பெறச் செய்து விடு
உன் கதையைப் படிக்கப், படிக்க
என் நெஞ்சு...
விம்மி பூரிக்கட்டும்'' என்கிறார்.

என்னே, பெண்ணின் மீதுள்ள பரிவு. கனிவு. கதை சிற்பியின் காலில் விழவைக்கும் அளவு கவியின் உள்ளத்தைக் கனிய வைக்கிறது. "கதியற்ற பெண்களின் ஊமை உணர்வுகளுக்கு உருவம் கொடுத்து, பெண் மனதின் ஆழ்ந்த ரகசியங்களை உணர்ந்து, பெண்மையைப் போற்றி, விழிப்புணர்வைத் தந்த மதிப்பிற்குரிய எம் நண்பனே உனக்கு வணக்கம்!" என சரத் சந்திரரின் பிறந்த நாள் விழாவில் மகளிரின் பாராட்டுதல்கள் மனதை நெகிழச் செய்கிறது. கவியும், கதைச் சிற்பியுமான இலக்கிய கடவுளர்கள் பெண்களின் மீது காட்டிய இரக்கமும், பாசமும் இதயத்திலிருந்து எழுந்ததால்தான் இன்றும், என்றும் அது உயிரோடு வாழ்ந்து கொண்டிருக்கிறது.

கதைச் சிற்பி இவ்வாறு சொல்கிறார் - இளம் எழுத்தாளர்களுக்கு...

'மனித வாழ்வில் எத்தனையோ துன்பங்கள் துயரங்கள் மலிந்து கிடக்கின்றன. அவை எழுத்தாளர்களான உங்களின் கண்களில் படவில்லையா? நமது அடிமைத்தனம், அறியாமை, வறுமை இவைகளால் மனித இனம் படும் பாடும் - இன்னல்களும் உங்கள் இதயத்தைத் தொடவில்லையா? இதையெல்லாம் தவிர்த்துவிட்டு, ஆபாசமான, பாலுணர்வு பற்றி மட்டுமே எழுதுவது கோழைத்தனமானதல்லவா' என்கிறார்.

இளம் எழுத்தாளர்களே இதயத்தைத் திறவுங்கள் ஏழைகளுக்காக! அவர்களின் விழிப்புணர்வுக்காக' எங்கு அறியாமை ஒழிக்கப்படுகிறதோ அங்கு ஏற்றம் அழைப்பில்லாமல் வரும் - தேடிக் கொண்டு.

வெ.இரா. நளினி

# முதலாவது

# உறவுறல்

# வாழ்த்து

எமதகந்தனை ஏங்க வைத்திடும்
இருள கன்றிடவே
தமிழெ னும்பெய ராலொ ளிர்ந்திடும்
தனித்தி ருவிளக்கே!

சிறிய வயதி லிருந்தி யல்பாய்ச்
செவிவ ழிபுகுந்தே
அறிவுப் பசியை யாற்று மினிய
அருஞ்சு வையமுதே!

எனது யானெ னும்செ ருக்கின்
இன்னல் பிணிகளை
மனமெ னும்நறு மலர்ம ணம்பெற
மாற்றும் நன்ம ருந்தே!

நீடும் வாழ்விந் நிலத்தி லென்றும்
நிலைபெ றாமலே
வாடும் மனிதப் பயிர்வ ளர்ந்திட
வழங்கும் தண்முகிலே!

விதிய லைகளி னால்பெ ருந்துயர்
விளைந்தி டாமலே
புதுநி ழல்கரை தனிலொ துங்கிடப்
புகும்து ணைப்படகே!

புதிய போதப் புகழ்வ டிவினில்
புலன்து லங்கிடவே
இதய வாவி தனிலி லங்கி
இனிய தாமரையே!

ஊழி யூழி காலம் உண்மைக்
குறைவி டமாகி
வாழி செந்தமி ழேயுன் சேய்கள்
வாழ்வு யர்ந்திடவே!

# கலைச்செல்வி

வெள்ளி முளைத்ததடா! – நமது
வேதனை தீர்ந்ததடா!
வள்ள லெனும்படியாய் – ஒளியை
வாரி வழங்குதடா!
கள்ள இருட்பகைவன் – நம்மைக்
கட்டிய கட்டவிழ்த்துத்
துள்ளி எழுந்திடுவோம் – கலைத்
தொண்டு புரிந்திடவே!

தூய மணங்கமழும் – விடியல்
தோன்றத் தொடங்குவதும்
தீயவர் எண்ணமெனப் – பனியும்
தேய்ந்து மறைந்துவிடும்!
நேய இனிமைதனை – நேர்ந்து
நெஞ்சில் நிறைத்திடுவோம்!
மாய உலகினிலே – மாயா
மகிழ்ச்சியுண் டாகிடவே!

காலை அமைதிதனைக் – காகம்
கத்திக் கலைத்திடுமுன்
நீலக் கடலலைபோல் – எழும்
நினைவுக் குவியலினால்
சீலச் சிறப்புடைய – கலைச்
செல்வியின் மாளிகைக்குச்
சாலை அமைத்திடுவோம் – சகம்
சாந்தி அடைந்திடவே!

கூகையும் மெய்ம்மறந்து பொந்தில்
குந்தி யிருக்குமடா!
பாகின் இனிய குரல் - குயில்
பண்கள் மிழற்றுமடா!
தோகைக் களிமயிலும் - நடனம்
தொடங்கும் சமயமடா!
சோகம் தொலைந்திடவே - உலகம்
சொக்கி மகிழுமடா!

தாமரைக் கோவிலிலே - கதிரோன்
தாழை அகற்றிடுவான்!
சேமக் கலன்முழக்கி - வண்டுகள்
செய்தி பரப்பினதும்
மாமரச் சோலையிலே - கிளி
மங்கல வாழ்த்திசைக்க
கோமள மானகலைச் - செல்வி
கொலுவில் அமர்ந்திடுவாள்!

தேனொத்த செந்தமிழில் - துதி
செப்பிச் சிரத்தையுடன்
வானக் கதிர்மதியை - மலராய்
வண்ணக் கவிதை யெனும்
ஏனத்தி லிட்டெடுத்தே - எழிலாய்
இறைவியின் முன்படைப்போம்!
'ஞானத்தை நல்கிடுக - தமிழ்
நாட்டு கிளியெனவே!





# வைகறை

அழகிய வைகறையே - என்னை
அகமகிழ் விக்கிறது!
பழகிய இடமெங்கும் - புதுமை
பார்த்திட வைக்கிறது!

குவளை எழில்மலரில் - கூடிக்
குவிந்துள திருவெனவே
பவள ஒளிப்பரிதி - பருவப்
பல்கதிர் விரிக்கிறது!

விசும்பிடை விளக்குகளாம் - உடுக்கும்
விடிகையில் வெருண்டனவாய்ப்
பசும்புல்லில் பதுங்குவபோல் - பற்பல
பனித்துளி படிகிறது!

பற்பல மலர்களிலே - மதுவைப்
பருகிய மதுகரங்கள்
அற்புதப் பண்ணிசைத்துச் - செவியில்
அமுதென வார்க்கிறது!

'கொத்தி உனைக்கொல்ல - மீனே
கொக்குகள் வருகிறதென்
றத்தி மரத்தனிலும் - அபாய
அறிக்கை கொடுக்கிறது!

# வைகறை

அழகிய வைகறையே – என்னை
அகமகிழ் விக்கிறது!
பழகிய இடமெங்கும் – புதுமை
பார்த்திட வைக்கிறது!

குவளை எழில்மலரில் – கூடிக்
குவிந்துள திருவெனவே
பவள ஒளிப்பரிதி – பருவப்
பல்கதிர் விரிக்கிறது!

விசும்பிடை விளக்குகளாம் – உடுக்கும்
விடிகையில் வெருண்டனவாய்ப்
பசும்புல்லில் பதுங்குவபோல் – பற்பல
பனித்துளி படிகிறது!

பற்பல மலர்களிலே – மதுவைப்
பருகிய மதுகரங்கள்
அற்புதப் பண்ணிசைத்துச் – செவியில்
அமுதென வார்க்கிறது!

'கொத்தி உனைக்கொல்ல – மீனே
கொக்குகள் வருகிறதென்
றத்தி மாத்தணிலும் – அபாய
அறிக்கை கொடுக்கிறது!

நீண்டகொம் பினிற்குரங்கு – இனிது
நீங்கிய திரவெனவே
பூண்டபே ரன்புடனே – மந்தியின்
புறத்தை அணைக்கிறது!

உய்வகை தனையுணர்ந்து – வாழும்
உயிர்களின் உவகையிலே
தெய்வீக அன்புணர்ச்சி – எழும்பித்
தேங்கிடச் செய்கிறதே!

# தழுவல் : வசந்தம்

எவ்வித மோ அறியோம் – அது
எங்கிருந் தோ அறியோம்!
வசந்தம் வருகையிலே – வரும்
வண்ணப் பறவைஇனம்!
பசுந்தளிர்க் கைகளினால் – மரம்
பரிந்து தழுவும் தினம்!

எவ்வித மோ அறியோம் – அது
எங்கிருந் தோ அறியோம்!
அரும்பும் மலர்களிலே – பர
மானந்த மானமணம்!
சுரும்பின் உடல்தனிலே – ஒரு
சுந்தர ஆபரணம்!

எவ்வித மோ அறியோம் – அது
எங்கிருந் தோ அறியோம்!
தேகம் புளகமுறச் – செய்யும்
தென்றல் திரிந்தசைத்து;
மோகத்தை மூட்டி விடும் – குயில்
மோகனப் பண்ணிசைத்து!

எவ்வித மோஅறியோம் – அது
எங்கிருந் தோஅறியோம்!
சின்னஞ் சிறுபிறையில் – பொங்கிச்
சிந்தும் எழில் நிலவு!
கன்னங் கரிய குழல் – மாதர்
கண்ணில்கா தல் பொலிவு!

எவ்வித மோ அறியோம் – அது
எங்கிருந் தோ அறியோம்!
அறிவுப் பெருங்கலத்தில் – உண்மை
அழகுப் பொருள்நிறைந்து
பிறவிப் பயன்பெறவே – கவிதை
பிறக்கும் மனம்திறந்தே!

# கவிதை

கவிதை கவிதை என்போம்! – அதுகண்
கண்ட தெய்வ மென்போம்!
செவியின் செல்வ மென்போம் – சேர்த்துச்
சிந்தை பெய்து கொள்வோம்!

நினைவை நேர்மை செய்து – நெறியில்
நிலைநி றுத்து கவிதை!
கனவு போன்ற வாழ்வைக் – கலைபாய்க்
கவின்பெ றச்செய் கவிதை!

காதல் மோக னத்தை – வாழ்வில்
காண வைத்த கவிதை!
சோதி வான மணிபோல் – ஞானச்
சுடர்து லங்கு கவிதை!

பேதை யென்ற பிணையை – அறவே
பெயர்த்தெ றிந்த கவிதை!
மேதையென்ற பெயரை – இட்டு
மேன்மை செய்த கவிதை!

சோம்பல் சூது சோகம் – பகைமை
சுட்டெ ரித்த கவிதை!
பூம்பொ ழில்ம லர்த்தேன் – இனிமை
பொதிந்து வைத்த கவிதை!

மனதை மாண்பு செய்து மதியில்
மணமெ ழுப்பு கவிதை!
புனித மான மனிதப் - பிறவிப்
பொருளு ணர்த்து கவிதை!

தலைமை தாங்கும் தமிழ்ப்பூம் - பொழிலில்
தளைய விழ்ந்து கமழப்
புலமைதேங்கும் கொடிகள் - அழகாய்ப்
பூத்த ளித்த கவிதை!

# எழில் மிகுந்த மாலை

எழில்மி குந்த மாலை வேளை
எனக்கி றங்கி வருகுது:
இதயம் கடலும் அலையு மாகி
இன்பம் பொங்கிப் பெருகுது:
முழவும் குழலும் முயங்கி நெஞ்சில்
மோகம் மூளப் புரியுது:
முல்லை மணத்தை அள்ளித் தென்றல்
முன்றில் தோறும் திரியுது:

தொழுவை ஒன்றிக்கிடந்த கன்றும்
துள்ளித் தாயைத் தேடுது:
தொலைவில் மேய்ந்த பசுவும் திரும்பித்
துரித நடையைப் போடுது:
அழகு கொழிக்கும் கிளியும் பழகும்
அரச மரத்தில் கூடுது:
அருமைக் காதல் மொழிக ளாடி
அகம கிழ்ந்து பாடுது!

பொழுதில் பூத்த லர்ந்த மலரும்
பொன்வண் டணையக் கோருது;
புலனில் புதுமை பொலிய வண்டும்
பூவை நாடிச் சேருது;
எழுதும் தொழிலும் முடிந்து கொழுநன்
எழுந்தி ருக்கக் கோருது;
இனிக்கப் பேசிச் சிரித்து மகிழ
இதயம் முந்தித் தீருது!

முழுதும் வானில் முத்து திர்க்க
முந்தித் திங்கள தெரியுது;
மோக னத்தின் சீவ னாக
முனைந்து நிலவைச் சொரியுது;
தொழுது கூட நெஞ்சில் தோன்றும்
தூய காதல் அரியது;
தொடர்ந்து மாலைப் பொழுது நாளும்
தோன்றி உதவி புரியுது!

# மகிழ்ச்சி

ஆற்றுக்குச் சென்றினிய நீரி லாடி
அரியதுகி லெழிலாகத் தரித்துச் சென்று,
நோற்றமண மலர்பறித்துக் கொண்டு வந்து
நோக்குறுநற் செண்டாக்கி தலையில் சூடிக்
கூற்றுவனே எனும்படியாய் அஞ்ச னத்தைக்
குழைதடவும் விழிக்கிட்டுத் திலகம் வைத்துப்
போற்றுகிற புன்முறுவல் இதழில் பூத்தும்
பொலியமனம் பூரித்துப் புனைந்து நின்றார்.

முன்றிலைநன் றாய்ப்பெருக்கிக் குளிர்ந்த நீரை
முத்திறைத்த தெனஅள்ளித் தெளித்து விட்டு
நன்றெனப்பொன் கிண்ணிதனைத் திறந்து கோலம்
நலம்பெருக நசைபெருகப் போட்டு வைத்தாள்;
அன்றலர்ந்த மலர்மணத்தை யளைந்து கொண்ட
ஆசைதனை மூட்டஅசைந் தசைந்து வந்த
தென்றல்தனில் திளைத்துலகை மறந்தாள், மாலை
தேன்பாகாய் இனித்திடவந் துற்ற தென்றே!

தாமரைதன் இதழ்க்கதவு மூடக் கண்டத்
தண்குமுதம் கண்மலர்ந்து தகைமை காட்டக்
காமலரில் மதுவைநனி பருகி வண்டு
கண்மயங்கி வழிநெருடும் காட்சி தன்னை,
மாமரச்சோ லைக் குயில்தன் மனங்க சிந்து
மணம்புரிந்த எழில் பெடைக்குமகிழக் காட்டிக்
கோமுறையாய் இசையமுதை வடிக்கக் கேட்டுக்
குறகுளணத் தன்னிதயம் குளிர லானாள்.

மெத்தமனங் கனிந்தவன்போல் கதிரோன் தானும்
மேற்றிசையில் போய்மறைய லானான்; வானில்
தத்தமிருப் பிடஞ்சேரப் பறவை யாவும்
தம்மினத்தோ டணியணியாய்ப் பறக்கத் தங்கிக்
கத்துகின்ற கன்றுகளை நினைத்துக் கொண்டே
கறவையெலாம் விரைந்துவரும் காம நந்தி
குத்துவிளக் கேற்றியபின் தனது காதல்
கொழுநன்வரின் அவள்மகிழ்ச்சி கூறப் போமோ!

# உறவுறல்

இளவேனில் பருவத்தே கருப்பஞ் சாறாய்
இனிக்கஇசை யெழுப்பிக்கொண் டேகுங் காட்டா
றுளதாயின் நீர்வேட்கை யுற்றோ னுக்கங்
குண்டாகும் இன்பம்போன் றெனக்கு மாவாா்!

தலைவாழை இலைதனிலே, பருப்பும், நெய்யும்,
தரமான கறி, குழம்பு, ரசம்மோ ரோடும்
பலகாரத் துடனுணவு படைக்கக் கண்டே
பசித்தவனின் இன்பம்போன் றெனக்கு மாவாா்!

உச்சிசுடும் வெய்யிலிலே, சாலை ஓரம்
ஒருமுகமாய்த் தழைமண்டிக் குறாகு ளென்னும்
பச்சைமா நீழலிலே வழிப்போக் கன்றான்
பதிந்திருக்கும் இன்பம்போன் றெனக்கு மாவாா்!

மழைக்குமழை தவிராதே உழுது, வண்டல்
மண்ணுடனே எருக்கலந்து கொட்டி, வித்தி
உழைப்புக்குத்தக்கபடி விளைந்த புன்செய்
உழவனுறும் இன்பம்போன் றெனக்கு மாவாா்!

காலையிலே கஞ்சிவைத்துக் கொடுத்து விட்டுக்
கழனியிலே நாற்றுநடச்சென்ற அன்னை
மாலையிலே மனைக்குவரக் கண்ட அன்பு
மக்கள்படும் இன்பம்போன் றெனக்கு மாவாா்!

அறைபட்டும், அடிபட்டும் மனைவி, மக்கள்
அகமனைத்தும் மறந்துதன்தாய் நாட்டுக் காகச்
சிறைபட்ட தொண்டனுக்குச் சுதந்த ரத்துச்
செய்தியுறும் இன்பம்போன் றெனக்கு மாவார்!

மடமயிலே! இளங்குயிலே! கிளியே! வண்டே!
மறைவாக நீவிரெலாம் சென்றி ருங்கள்!
தடந்தடமாய்ப் பார்த்துக்கொண் டிருக்கி றேன்நான்;
தலைவரினி வருகின்ற நேரம் தானே!

# எதிர்பார்த்தல்

கூடிக் குழந்தைகள் ஓடித் தெருவினில்
கும்மாளம் கொட்டயிலே – அவர்
வேடிக்கைப் பேச்சுக்கள் பேசியென் நெஞ்சில
விருப்பம் விளைத்து விட்டார்!

கொல்லைப் புறந்தனில் நெல்லைக் கொறிக்கும்
குருவி விரட்டையிலே – எழில்
மல்லிகைப் பூவினை மெல்ல எறிந்து
'மறந்தனை யோடி' யென்றார்!

தங்கக் குடத்தினைத் தேய்த்துக்கழுவியே
தண்ணீர் முகக்கையிலே – வந்து
புங்க மரத்தின் மறைவி லிருந்து
பொழுது குறித்துரைத்தார்!

'தாயர் தமக்கையர் காவல் கடந்திடத்
தாமத மாகு' மென்றேன்; – அடி
ஆயிரம் ஆண்டுகள் காத்திருப் பேனிந்த
ஆற்றங் கரையிலென் றார்!

நீலத் துகில்துணி கொண்டு வியர்க்குமென்
நெற்றி தனைத்துடைத்தேன் – உன்றன்
சேலொத்த கண்களைச் சேலை மறைக்கவும்
சிந்தை வருந்துதென்றார்!

என்னகந் தன்னையோர் கோவிலாய்க் கொண்டதில்
என்றும் இருப்பவரை – ஒரு
புன்னகை யால்வர வேற்றுக் களிக்கப்
பறந்தெதிர் பார்த்திடவே!

வாழும் பயிரின மோங்கி வளர்ந்திட
வானத்தைப் பார்ப்பதுபோல் – இன்று
வீடு மறந்து வினைமறந்து நின்றேன்
வீதி முனைதனிலே!

# தவிப்பு

பாதி இரவும் கழிந்தது – நல்ல
பால்வெண் ணிலவுடனே
காத லன்வரக் கண்டிலேன் – என்னைக்
களிப்பி லாழ்த்திடவே!

உறங்க லாமெனக் கண்களை – மூடி
உடல்கி டந்திடி னும்
பிறங்கு காதலின் பெட்பது – நெஞ்சைப்
பீறி எழுகிறதே!

தூய மல்லிகைப் பூக்களும் – தொகையாய்த்
துன்பம் தருகிறதே!
பாயும் தலையணை யாவுமே – அனலாய்ப்
பற்றி எரிகிறதே!

கண்ணைக் காத்திடற் காகவே – உள்ள
கதவு போன்றிமைகள்
எண்ணி யேங்கும் மனத்தினுக் – கில்லை
இணைந்து காத்திடவே!

பருவ காலம் பொருந்தவே – நெல்லில்
பசிய முளை வருமேல்
உரிய ஐம்புல உணர்வினோர் – இதனை
ஒறுக்க இயலுவதோ!

நாண மாகிய கட்டினை – விட்டு
நழுவும் நல்லறிவைக்
காண வேண்டு மெனின்இனி – விடியக்
காக்க வேண்டியதே!

கரியில் மூட்டும் நெருப்பிலே சிவக்கக்
காய்ந்த பொன்னெனவே
இரவி தோன்றுதற் கின்னமும் – ஊழி
எத்த னை செலுமோ?

# வேட்டை

சுற்றி விரியும் கதிர்க்கரம்
முற்றிலுமே – சுருக்கிச்
சூரியன் போய் மறைந்தான்.
உற்ற செல்வம் உதிர்த்தவர்
உள்ளமென – உலகம்
உகைந்த திருள்தனிலே!

பகலெ லாம்பய னற்றுக்
கழிந்ததுகாண் – பொட்டல்
பதையைப் பார்த்தபடி
சுகமெ லாம்தமிழ்த் தோழியின்
பால்பெறவே – இரவில்
சுற்றித் திரிந்திடுவேன்.

நறும ணங்கமழ் தென்றல்
நிலவையெலாம் – வானில்
நல்ல இளம்பிறையார்
வெறும ணற்பரப் பில்வெகு
வாயிறைத்தே – என்னை
வேதனை செய்திடுவார்!

தூய எண்ணங்க ளாகிய
நல்லணிகள் – ஒலி
தோன்றும் குறிப்பினிலே
பேயு றங்கிடும் நள்ளிர
வாயிடினும் – கண்டு
பேசிக் களித்திடுவேன்!

வான மன்றில் பரவி
வயங்கவரும் – நல்ல
வண்ணத் திருச்சுடராம்
மீனி னங்களி னூடு
மறைந்திருப்பாள் – காதல்
மேலிட நாண முடன்!

கயல்கள் துள்ளிக் கதிரில்
மணியுதிர்க்கும் – எழில்
காட்சி தனில்மகிழ்ந்து
வயல்க ளோடு வரப்பில்
அமர்ந்திருப்பாள் – என்றன்
வானெதிர் பார்த்தவளாய்!

மேக மண்டலம் தன்னில்
மிகுந்தொளிரும் – மின்னல்
மேனியாய் மேவிய வள்
மோக னச்சிறு புன்னகை
ஒன்றினிலே – இன்பம்
முற்றும் முகிழ்த்திடுமே!

# காதலி

மதர்வேட்ட செவ்வரிக்கண் மதிமு கத்து
மலர்வேட்ட கருங்கூந்தல் மடமான், மாதாய்
எதிர்வீட்டில் பிறந்துவளர்ந் தெனக்கா கத்தான்
எழிலார்ந்த அணங்கெனவே இருக்கின் றாளென்
றதிர்வேட்டு வைத்திடினும் அஞ்சா தாகி
அரசமரத் தளிர்மறைவி லமர்ந்தி ருக்கும்
கதிர்வேட்ட கிளியெனவே நானும் வாசல்
கடைகாத்து நின்றிருப்பேன் அவளைக் காண!

கான்பெற்றுக் கொண்டுநனி களிக்கும், காண்போர்
களைப்பாற நீரருந்தும் சுனையை! கான்போல்
வான்பெற்றுக் கொண்டுநனி மகிழும், வாரி
வண்ணநில வொளிவழங்கும் மதியே! வான் போல்
தேன்பெற்றுக் கொண்டிருக்கும் மொழியாள்! தேர்ந்த
திருவுருவம் திகழுஞ்சிலை வடிவாள் தன்னை
நான் பெற்றுக் கொண்டுவக்கும் நன்னா ளென்வாழ்
நாட்களிலொன் றுண்டெனவே நம்பி னேன்நான்!

பூப்போலும் மேனியெனின் பொருந்தும்; போற்று,
பொன்போலும் வண்ணமெனின் பொருந்தும்; வெள்ளைப்
பாப்போலு முறுப்பனைத்தும் படியப் பெற்ற
பாவையவள்! பார்ப்பவர்கள் பறிக்கும் நற்பூங்
காப்போலும் தண்மையினள் எனினும், என்றன்
கண்காணாப் போதெல்லாம் கனலும் காட்டுத்
தீப்போல எரித்திடுவாள்; தினமும் நெஞ்சில்
தித்திக்கும் நினைவுகளைத் தெளித்து வைப்பாள்!

காதலொடு காணுங்கண் ணசைவு போதும்;
கனியிதழில் தவழவிடும் முறுவல் போதும்;
போதுமலர்ந் திடுங்காறும் புலன டக்கிப்
பொறுத்திருப்பீர் எனப்புரியும் போதம் போதும்;
கோதிவிடும் கூந்தல்நுனி பற்றி மோந்து
கொண்டுமனங் களிக்கின்ற குறிப்பே போதும்;
வேதனைகள் தீர்ந்திதயம் விரும்பு மின்ப
விண்வெளியில் நான்பறப்பேன் விரைந்து நாளும்!

தென்றலிலே நிலவுகலந் திடுத லொப்போ!
திருக்குறளில் வாழ்வுகலந் திடுத லொப்போ!
மன்றலிலே முல்லைகலந் திடுத லொப்போ!
மதுரவிசை தமிழில்கலந் திடுத லொப்போ!
அன்றிலிரண் டாணும்பெண் ணாய மர்ந்தே
அகமகிழ்வில் அவனிமறந் திடுத லொப்போ!
முன்றிலிலே நாங்களமர்ந் திருக்கு போது
முழுவதுமொப் பெனினுமவை யொப்பா காதே!

அத்தைமகள் தான்தாரா! முறைப்பெண்! நாளும்
அதிகாலை வந்தெனது பணிகள் செய்வாள்;
சொத்துசுக மிகுந்ததெலா மத்தான் முன்பே
சுறுசுறுப்பாய்ச் சூதாடித் தொலைத்து விட்டார்!
மெத்தமனம் நொந்தஅத்தை செத்துப் போமுன்,
மெதுவாயென் கைப்பற்றிக் கொண்டு, "கண்ணா!
புத்தமுத மிவளுனக்குச் சொந்தம்! வைத்துப்
போற்றிக் கொள்!" எனப்புகன்று விட்டுப் போனாள்!

ஆராஇன் பந்தரும்நல் லமிழ்த மென்றன்
அகத்திருளை அகற்றவரும் திருவி ளக்காய்
தாராவை யென்னகத்துத் தலைவி யாக்கத்
தடையெதுவுங் கிடையாது தானென் றாலும்,
ஊராரின் முன்னிலையில் அவள்கைப் பற்றும்
ஒப்பறுமந் நன்னாளை யொதுக்கிக் கொண்டு
தீராத பழியாகிக் கிடக்கின் றாரோர்
'திருவாத்தன் இவ'ரெனவூர் செப்ப அத்தான்!

பித்தாய சீட்டாட்டப் பேச்சல் லாமல்
பிறபேச்சுப் பேசாத பேதை யத்தான்,
'முத்தாய மணியாய முதலுக் கெல்லாம்
முதலாகி யுள்ளவளென் மகள்தா ராதான்!
பத்தாயி ரம்ரூபாய் மொத்த மாகப்
பணம்தந்தா னுக்கிவள்பத் தினி'யென் கின்றார்!
'இத்தய மிதுகாறும் பெண்ணைப் பெற்றோர்
இயம்பாத இன்னாச்சொல் லிதுதா' னென்ன!

வாதாடி வழிகாட்டி வைத்தும், வாழும்
வகையறியாத் தந்தையுடன் வாழ்ந்து கொண்டே
கோதோடு கூடிவிளைந் தினிக்கா நின்ற
கொழும்பலவின் தீஞ்சுளையாய்க் கொள்ள நானும்,
தாதாடுங் கருவண்டு புகுந்து வெள்ளைத்
தாமரையிற் குடிகொண்ட தென்னுங் கண்ணாள்,
போதோடு வந்தெனது வீட்டில் நாளும்
புசிப்பதற்கு வகைசெய்து கொண்டு போவாள்.

முத்தான முரலொளி மிளிரக் கொல்லை
முதிர்கனியி னிதழ்முறுவல் முகிழ்ப்ப, மூசும்
கொத்தான கருங்கூந்தல் முகின்மேல் முல்லை
கூன்பிறைபோல் நிலவிடவே, குயிலாய் மெல்ல
'அத்தா'னென் றழைத்தன்பு பெருக அன்றென்
அருகினிலே வந்தமர்ந்தாள்; அகிலத் தின்மேல்
சொத்தான தத்தனையும் தொலைத்தோர்க் கொன்றும்
சுகமுண்டா? சொல்லுங்கள் சுருக்கா' யென்றாள்.

"உழுவதற்கு மாத்திரமென் றிருந்த நன்செய்
ஒன்பதுகா ணியுமறவே தொலைத்த தந்தை!
தொழுவதற்கு மாத்திரமே கண்முன் தோன்றித்
துயர்நேரின் தூரம்போய்த் தொலையும் தெய்வம்!
விழுவதற்கு மாத்திரமே போதா நீராய்
விளங்குகிற ஏரிகுள முள்ள ஊரில்
அழுவதற்குமாத்திரமே உயிரைக் கொண்டிவ்
வவனியிலே உள்ளேன் நான்ர "அத்தான்" என்றாள்

நிந்தைகளில் இதற்குநிக ரான நிந்தை
நீணிலத்தி லில்லையெனச் சொல்லு மாறாய்த்
தந்தையெனும், - தயை ஞானம், - தகவி லாரால்
தரம் தருமம் தான் குறைந்து தாமும் நாட்டைச்
செந்தமிழ்நா டென்கின்ற போதும், எந்தத்
தேன்வந்து பாயுமினிக் காதி லென்றன்
சிந்தையிதை எண்ணியொரு புண்ணாய், நானும்
சிறுகத்தேய்ந் திறந்திடுவேன் அத்தான்," என்றாள்.

"நிச்சயமாய் இன்றையஇந் நிலைமை நீங்கி
நிகரற்ற நிறைவாழ்வு நீயும் வாழக்
கச்சிதமாய்க் கலந்திருக்கும் உன்வாழ் நாளில்
கணக்கறுநன் னாட்களெனக் கருது கின்றேன்
துச்சமென இதையொதுக்கித் தள்ளு தூரம்;
துயரமொடு துளியேனு மின்றி ஊரில்
அச்சமற்றிவ் வவலமதை மறந்து முன்போல்
அமைதியுட னிருதாரா என்ன கத்தில்!

கனிக்காக வளர்ந்துமரம் தழைத்தும் பூத்துக்
காய்த்ததுபின் கனிகின்ற வரையும் காக்கும்!
தனக்காகத் தன்வாழ்வுக் காகச் செய்யும்
தனிக்கடமை மகவினைத்தாய் தந்தை காத்தல்!
பனிக்கால வயிற்றினிலே பிறந்திப் பாரைப்
பரவசம்செய் கின்றஇள வேனில் தான்நீ!
உனக்காக நானிந்த உடல்வைத் துள்ளேன்;
உயிராக இதிலிருநீ தாரா!" என்றேன்.

"நிந்தைகளில் நிகரற்ற நிந்தை யென்றும்
நிலைத்திருக்கத் தேடிவைக்கும் என்னைப் பெற்ற
தந்தையொரு கொடியவர்தான்; அவர்நான் சாகும்
தடங்காட்டிக் கொடுக்கின்றார்; தகுந்த தான
விந்தைமிகு செஞ் சொற்கள்விழைந்து கூறி
விரைந்தென்னைச் சாகவிடா திவ்வா றாகத்
தந்திரமாய்ப் பேசியுயிர் தரிக்கச் செய்து
தவிக்கவைக்கும் கொடியவர்நீர்" என்றாள் தாரா.

பழுதுவரும் எனநினைத்துப் பாரா தத்தான்
பத்தாயி ரத்தையெதிர் பார்க்கின் றார்; கேட்
டழுதுவரும் உனைச்சிரிக்க வைப்ப தற்காய்,-
'அகமுடையா' ளெனவுனைநான் அழைப்ப தற்காய்,
உழுதுவரும் மாடெனவே களைப்புமேலிட்
டுடல்வலிக்கும் வரையுமுளம் ஒன்றிக் குந்தி
எழுதவரும் என்திறமை யனைத்தும் கூட்டி
இணையில்லாக் காவியத்தை எழுது கின்றேன்.

மண்ணீர மறமற்றுகி வளர்ச்சி குன்றி
மனங்கவரும் பசுமையெழில் மாறி வாடித்
'தண்ணீரைத் தா தாயே!' என்று பாரைத்
தாலைதாழ்த்தி இரக்கும்பயிர் போன்றி ராமல்,
கண்ணீரைத்துடைத்துவிட்டுக் கவலை யின்றிக்
காத்திருதா ராஇன்னும் கொஞ்ச காலம்!
எண்ணாயி ரம்ரூபாய் சேர்த்து விட்டேன்;
இனியிரண்டா யிரமிதனால் சேரும்" என்றேன்.

உள்ளத்தில் இதுவரைநான் ஒளித்து வைத்த
உண்மையிதை உணர்ந்துளமும் குளிர்ந்த தாரா,
முன்னொத்து வருத்தத்தை மூட்டும் பெற்ற
முட்டாள்சொல் களைந்தவளாய், முறுவல் மேவக்
கண்ணொத்து வடிகின்ற சுடர்நீ லங்கள்
கமலத்தில் காண்பனபோல் களிக்கும் கள்
வெள்ளத்தைத் துடைத்தபடி "சிக்க லெல்லாம்
விடுவித்து விட்டீர்நீர் அத்தான்!"

"பண்ணாவேன் நானும்; நீர், பண்ணுக்கேற்ற
பாட்டாவீர்! அதுவன்றேல், பாங்காய்ப் பார்க்கும்
கண்ணாவேன் நானும்; நீர், கண்ணுக் கேற்ற
கவிஞனாவீர்! அதுவன்றேல், கருத்தைக் காட்டும்
எண்ணாவேன் நானும்; நீர், எண்ணுக் கேற்ற
இலக்காவீர்! அதுவன்றேல், எழில்மி குந்த
பெண்ணாவேன் நானும்; நீர், பெண்ணுக் கேற்ற
பேராண்மை பிறங்கிடுமாண் ஆவிர்!" என்றாள்.

'தேனொத்த வெண்ணிலவை வாரிக் கொட்டித்
தேகத்தை யதில்திளைக்கச் செய்யும் திங்கள்,
பூநத்தித் திரியும்கரு வண்டி ரண்டைப்
பொன்னொத்த முகத்தினிலே பொருத்திக் கொண்டு
வானத்தை வெறுத்துவிட்டு வந்தின் றிந்த
வையத்தி லெனதுமனை புகுந்தோர் மாதாய்
மோனத்தைக் கலைத்துவிட முயன்றேன் முன்னால்
மோகனங்கள் புரிகிறதே நன்றாய்" என்றேன்.

"மோசமிது தான்அத்தான்! மொழியு மொன்று;
முறுவல்வே றென்றெனநீர் முயன்று போடும்
வேசமிது வேண்டாங்காண்! இன்னும் நானோர்
விவகாரம் தெரியாத விளரி யன்றே!
நேசமதை நெஞ்சினிலே நிறைத்துக் கொண்டு
நேர்மாறாய்ப் பேசிடினும் என்னாம்! முல்லை
வாசமதை மறைக்கமுடி யாது மூடி
வாழையிலை தனில்வைத்த போதும்!" என்றாள்.

"இழுதொக்கும் அருஞ்சொற்க ளெல்லாம் வந்தின்
'றெனையெழுதிங் கெனையெழு'தென் றியம்பக் கேட்டே
எழுதக்கை பறக்கிறதென் னிதயந் தன்னில்
இருந்தகவி பிறக்கிறதற் கெனவே; நீயோ
'முழுதுக்கும் அதிகாரி நான்தான்' என்றே
முடிச்சவிழ்த்து மோகனங்கள்கொட்ட நின்றாய்!
பொழுதுக்கு யாரிடுவா ராணை; சற்று
பொறுத்திருந்து பொழுதேபோ வெனவே", என்றேன்.

"புவியுழுது சேறாக்கிப் பயிரை நட்டுப்
பொன்போன்று விளைந்தநெல்லைக் குத்தித் திரட்டி
அவியிழுது பெய்துகலந் தட்ட சோற்றை
அருந்திடவா ருங்க'ளென அழைக்கின் றேன்...
'கவியெழுதப் பறக்கிறது கை' யென் கின்றீர்;
கற்கண்டாய் எழுதுங்கள்;கவிதைக் கென்றன்
செவியமுது கொண்டிருக்க வில்லை; நானும்
செல்கின்றேன்." என்றெழுந்து சென்றாள் தாரா.

சேவலினைத் தேடிவந்த செங்கா லன்னச்
சிறுபெடையீ தெனத்திரும்பி வந்தாள்; "சேர,
நாவலினைத் தாருங்கள் அத்தான்! அந்த
'நட்டார்மன்' எழுதினதை, யென்றாள். நானும்
ஏவலனைப் போலெழுந்து பெட்டி, பேழை -
இல்லாத இடமெல்லாம் தேடித் தீர்த்தவ்
வாவலினைப் பெருக்கிடவே சொன்னேன்; "இந்த
அல்லியர சாணிகதை படிநீ!" என்றே.

'இதற்காக இதைப்படிநீ என்ப தென்றும்
இயல்புமக்கின் றேன்மறந்தீர் இதைநீர்;" என்றாள்.
'முதற்காதல் இடைக்காதல் எதுவு மின்றி
மூத்தவர்கள் மொழிந்தமுறைப் படியு மின்றி,
எதற்காக வும்என்மேல் ஆண்கள் வாடை
என்றும்பட வேண்டாமென் றாளாம் அல்லி;
அதற்காகத் தானிதைப் படிக்க வேண்டும்
அரம்பையே, ஊர்வசியே!" என்றேன் நானும்.

கொடிக்கென்ன குத்தியதோ! முல்லை மூரல்
குமுதச் செவ் விதழின்மேல் குந்திக் கொள்ள,
வெடுக்கென்ன மென்றளிர்க்கை யோங்கிக் கண்ணில்
வெகுளித்தீப் பொறிபறக்க வீசி யென்றன்
இடக்கன்னம் கன்றிடவே அறைந்தாள்; நேர்ந்த
தின்னதெனத் தெரிவதற்குள் எழிலி யேற்பத்
திடுக்கென்னப் படியிறங்கிச் சென்றாள்; சற்றும்
திரும்பியெனைப் பாராமல் தெருவைத் தாண்டி!

விண்ணிலிருந் தெழில்பருதி விலகா முன்னே,
வெண்முல்லை விரிந்துமணம் வீசா முன்னே,
பண்ணையினங் கண்டிசைக்கும் பாடல் வண்டு
பதுமமலர் குவியவிட்டுப் பறக்கா முன்னே,
திண்ணைதெரு திசையனைத்தும் இருளா யின்று
திகைக்களனைச் செய்ததெது? தெரிவை என்றன்
கண்ணையும்தன் காதலுடன் - களைந்து கொண்டு
கடிதகன்று சென்றனளோ காணே னன்றே!

தானடித்த தெதற்கெனவும் தான்சொல் லாதென்
தலைதாழ்த்தி வைத்துவிட்டுத் தாரா சென்றாள்;
ஏனடித்தாள்; ஏனடித்தாள்; எனவி னாவி
இடையீடில் லாதென்வாய் இதயந் தன்னைத்
தேனடைத்த அடையென்னத் திகழு மாறே
தினையளவும் இடமின்றித் துளைக்க விட்டு,
நானிடித்த புளியெனவே இருந்தேன் குந்தி
நள்ளிரவு கடந்தபின்பும் நலிவோ னாகி!

பாதிதுயர் பாதிவெறுப் பாகப் பண்ணிப்
பரதவிக்கச் செய்தஇரா பாழாய்ப் போகக்
கோதியதன் னிருசிறகும் புடைத்துக் கோழி,
'கொக்கரக்கோ' எனக்கூவிக் கூற வேயென்
வேதனையும் வேரறுந்த மரம்போல் நெஞ்சை
விட்டுவிழ வெளிக்கதவை மூடி னேன்நான்.
காதலெனும் சொல்கேட்கச் சொல்லக் காணக்
கருதிடவும் கடுவென்னக் கசந்த வாறே.

'சொல்லரசி யல்லிகதை படிநீ' யென்று
சொல்லியசொல் சுருக்கென்று தைத்த தேயோ!
மல்லரசி யாகியிவள் எனது கன்னம்
மாங்கனிபோல் வீங்கவைத்து மறைந்தா ளென்றால்,
கல்லரிசி கலந்தட்ட சோற்றை யொப்பக்
கடைவாய்ப்பல் லுதிருமன்றோ கால கண்டி
இல்லரசி யாயிருந்தால்! இவளி யல்பை
இவ்வாறு வெளிப்படுத்திற் றெனது நல்லூழ்!

நாகங்கள் புதற்புற்று நாடிச் செல்ல,
நலித்தஇருள் நலிந்திடநா னிலத்துள் நாளும்
மோகங்கொள் மடமகளி ரணைப்பை நீக்கி
முகமலர்ந்து தொழில்முயன்று முடிக்க வேநீர்
ஏகுங்கள்; ஏகுங்கள் எனவே காலை
எழில்தருக்கள் மீதுதுயில் நீத்தெ ழுந்த
காகங்கள் கரையுமொலி கேட்டு வானில்
கதிரவனும் கவினுறக்கண் மலர்ந்தா னன்றே.

'சருக்கரையும் பசும்பாலும் கனியும் தேனும்
சப்பையிவை' எனச்செப்பித் துப்பு மாறே,
அருக்கனென விளக்கஞ்செய் திடவே நானும்
அருந்தமிழில் கவிதைசெயக் கண்ணை மூடி
ஒருக்களித்து படுத்திருந்தேன்; எனைய றந்தவ்
வொப்புவமை யற்றஇளங் காலைப் பொழுதில்
தெருக்கதவைத் தட்டுகிறாள் அவளும் வந்தே
தினந்தோறும் போலன்றும் திடுதி டென்றே.

"சே சே சே! இதுவென்ன தொல்லை! நீயேன்
தெருக்கதவை இன்றிடித்துத் தூள் செய்கின்றாய்
வாசாதுப் பெண்மணியே!' என்றின் றுன்னை
வரவேற்பார் இங்கெவரும் இல்லை; வாது
பேசாது போய்ச் சேர் உன்னிடத்துக்" கென்றென்
பெருஞ்சினத்தை அடக்கியிது பேச லானேன்.
"மாசேதும் பூசவில்லை அத்தான்! உங்கள்
மன்னிப்புப் பெறவந்தேன்', என்றாள் மாறாய்!

"அல்லியர சாணிகதை படித்துப் பாரென்
றறிவித்த முறையில்தவ றென்ன கண்டாய்?
சொல்லதனை முன்னேநீ! சொல்லா விட்டால்,
சொக்கவைக்கு கனியிதழ்வாய் பொக்கை யாக,
முல்லையென முத்தென்ன முருந்தே யென்ன
மோகனமாய் முறுவலித்து மூடும் உன்றன்
பல்லனைத்தும் மீதமிச்ச மின்றித் தட்டிப்
பைதனிலே போட்டனுப்பி வைப்பே" னென்றேன்.

"பெண்ணாக இருந்ததனால் பிழைத்தாய்! அன்றேல்
பிழைசெய்த கையதனைப் பிய்த்தெ றிந்து
மண்ணாக மக்கிவிடச் செய்தி ருப்பேன்;
மட்டுமரி யாதையறி யாத பெண்ணே!
புண்ணாகு மாறிரவு பூரா எண்ணிப்
புகுங்கிமனம் நொந்துகிடக் கின்றேன் நானும்!
ஒண்ணாது கதவுதனைத் திறக்க! நீயும்
ஓடிப்போ! நிற்காதே இனியிங்" கென்றேன்.

"என்மானம் மதிப்புமரி யாதை யென்ப
தெல்லாமும் உமக்கிளப்ப மான தேனோ
கண்மானும் இதயத்தி லிருந்து காதல்
காவியத்தை வடிக்கின்ற கர்வ மோகாண்!
பொன்மானும் எழில்பாவை மீதில் சேற்றைப்
பூசுமுங்கள் பொல்லாங்கு பொறுக்கா தென்றன்
தன்மான உணர்ச்சியினால் தாக்குண் டீர்!நும்
தலைக்கனமும் தீருமினி!" என்றாள் தாரா.

"கையொன்று நனிநீண்டு நேற்று நீயென்
கன்னத்தைப் பதம்பார்த்து விட்டுச் சென்றாய்!
பொய்யொன்று மெய்யென்னப் பொருந்தி யின்றும்
பொல்லாத பழிபோட வந்தா" யென்றே
"சை'யென்று கதவுதனைத் திறந்து சற்றுத்
தலைநீட்டத் தென்பட்டாள் தாராத் தங்கம்!
மையொன்று கண்மழையாய், மங்கல் போர்த்த
மதிமுகமாய் மாழ்கிமனம் மாறச் சொன்னாள்:

"பேர்விசயம் புரியாமல் கவிஞ னென்று
பேர்பெற்றுக் கொண்டென்வாய் பிடுங்குகின்றீர்!
பார்வசியம் செய்பவர்கள்! உயர்ந்தோர் தம்மைப்
பாழாக்கும் படுபாவிப் பெண்க ளந்த
ஊர்வசியும் அரம்பையுமே! என்பேர் தாரா!
ஓர்ந்திதனை உணராமல், நேற்று மாறாய்
நேர்வசிகொண் டென்நெஞ்சில் குத்தல்போலந்
நீசர்பெய ரிட்டழைத்தீர்எனைநீ" ரென்றாள்.

சொத்தீட்டி சுகமீட்டி வைத்த தந்தை,
சுவைபடச் சொல்லூட்டி வளர்த்த அன்னை,
புத்தேட்டில் மணம்பதியப் புகட்டிப் புத்தி
போதித்த ஆசிரியன், - இவர்கட் கன்றிக்
கத்தீட்டி கொண்டென்னைக் குத்தி னாலும்,
குன்றிமணி யளவெனினும் குலையா நெஞ்சம்
மத்தாட்டி விட்டதயி ரெனவே இன்றிம்
மாதாட்டிக் கலக்கிவிட மலைத்து விட்டேன்.

மலையிரக்க மடையப்பெண் மயில்தா னின்று
மதகரியை, விழ்த்துகிற மடங்க லேற்றை
வலையிறுக்கிப் பிடித்ததெனுங் கதையா யென்றன்
வாய்வாக்கு வலிமைதனை யிழக்க, வாய்த்த
கலையிரக்கப் படுமாறு கறைசு மத்திக்
கட்டுண்டு விடச்செய்தாள். கற்றோர்க் குத்தம்
தலையிறக்க மடைவதிலும் கொடிய தான
தண்டனைவே றில்லையெனத் தவித்தே னேனும்,

அரிந்தஇளங் கொடியெனவே மேனி வாடி,
அரவிந்த மெனவிழிகள் சிவந்து வீங்கிச்
சரிந்தசுருள் கருங்கூந்தல் நுதல்மேல் வீழச்
சங்கெனச்செம் பவளஇதழ் வெளிர நின்று,
பரந்தமனத் திருந்தெழுதன் மானச் சீற்றப்
பார்வையெனைச் சட்டெரிக்கப் பதறி யேநான்,
விரிந்தகரம் நீட்டிமனம் கரைந்த ழைத்தேன்.
"விளக்கேவா! விடிவுதர விரைந்திங்" கென்றே.

"சந்தித்த தாலுன்னைப் பொங்கி வந்த
சரிமகிழ்ச்சிப் பெருக்கினிலே வழிந்த நன்றிச்
சிந்தித்துச் செப்பவிலை யெனினும், மற்றுன்
செங்கையினா லதற்கெதிர்நீ செய்து தீர்த்தாய்!
நிந்தித்து மனமினியும்நெகிழ வேண்டாம்!
நேற்றுடனே அதுமுடிந்த கதையா கட்டும்!
வந்திந்தேன்; மன்னித்து மறந்து விட்டு
வழக்கம்போல் வாஎன்றன் வாழ்வே." என்றேன்.

"கொல்லையிலே கொழுந்தோடிப் படர்ந்து நன்றாய்க்
கொழுகொழென அரும்பெடுத்துக் கமழும் நல்ல
முல்லையிலே பிறவாமல், முகந்து மேயும்
மோட்டெருமை மோந்துடலை மூழ்க்குங் கோரைப்
புல்லயிலே கொண்டகுள நீரில், வெய்யோன்
போய்மறைந்த நள்ளிரவில் பூக்கும் பொல்லா
அல்லியிலே பிறந்தவளின் கதையில் என்ன
அதிசயத்தைக் கண்டீர்நீர் அத்தான்?" என்றாள்.

துளிக்கவலை எனக்காயுன் னுளத்தில் வைத்து
தொழுவத்தைப் பார்;அட்டில் பார்; தொ டர்ந்து;
ஒளிக்கவிலை உன்னிடத்தில் எதையும்! நானும்
உறங்கவிலை ஒருதுளியும் இரவில்! ஒக்கக்
குளிக்கவிலை; குடல்குறைந்து கூவா முன்னே,
கொண்டுவந்தேன் உணவெனவே, உனது கையால்
அளிக்கவிலை! இவ்வளவும் இருக்க, அந்த
அல்லிகதைக் கவசரமேன் தாரா!" என்றேன்.

திறந்திருந்த வெளிக்கதவை விரைந்து மூடித்
தினமும்போல் செயலிலவள் திளைக்க லானாள்;
முறிந்திருந்த மனமிரண்டொன் றாயிற் றென்று
முகமலர்ந்தேன் கடன்கழித்து முடித்தேன் நானும்.
சிறந்திருந்த நெய்விட்டுச் சுட்டத் தோசை
சிவக்க அரைத் திட்டசுவைத் துவையல், சேரக்
கறந்திருந்த பசும்பாலைச் சுண்டக் காய்ச்சிக்
கடும்பசிக்கு மருந்திதெ·னக் கொண்டு வந்தாள்.

மூசுகின்ற முல்லையிவள் மூக்கிற் கென்றும்;
மோகனமாய் விண்வெளியில் முகிழ்த்து வந்து
பேசுகின்ற பெருமதிதான் கண்ணுக் கென்றும்!
பிறிதொன்று மிணையில்லை யெனவே பேச,
வீசுகின்ற மணப்பலவின் சுளைவாய்க் கென்றும்;
விதிமுறையாய் இசைகூட்டி விரும்பிக் கேட்க
மாசகன்ற மகரந்த மலரில் பாடும்
மதுகரம்தான் மாதிவளென் செவிகட் கென்றும்!

பொழுதன்று புதிதாகப் புலர வில்லை;
பூவுலக மும்புதிதாய்ப் பிறக்க வில்லை;
விழுதொன்றும் ஆலமரத் தளிரில் தங்கி
விடியலிலே விருந்தயர விழைந்த தும்பி,
பழுதொன்று மில்லாத பதுமந் தன்னில்
பண்பாடிப் பசித்துமது பருகக் கண்டும்
'எழுதென்று தூண்டாதென் னிதய மின்றேன்
எதையெதையோ எண்ணிக்கொள் டேங்கல் லுய்யும்!

அகிலொன்றின் மணங்கமழும் கூந்தல்! ஆடும்
அருங்குவளை மலர்விழிகள்; அமைந்த ஆலைத்
துகிலொன்றி மூடியபொன் மேனி; துள்ளித்
துணையொன்றுக் கொன்றென்னத் தோன்றா நின்ற
நகிலொன்றி நலிக்கும்மின் னிடைமற் றெல்லாம்
நாடோறும் போலன்றி நயக்கச் செய்து
பகலொன்று பயனின்றிக் கழியு மாறு
பைத்தியமாய் எனைப்படுத்தி வைக்கும் போலும்!

வாடிக்கொண் டிருக்கிறஎன் முகம்பார்த் தென்னை
வாழ்விக்க வரவிருக்கும் வனிதை சொன்னாள்;
"பாடிக்கொண் டிருக்கின்ற குயில்மேல் பாடிப்
பணம்பண்ணும் காவியத்தை முடியீ ராயின்,
கூடிக்கொண் டிருக்கின்றநற் காலம் கூடக்
கூடாத தாகிவிடக் கூடும்! கூடின்.
மூடிக்கொண் டழநேரும் முகத்தை! அத்தான்!
முறையாக முயன்றதனை முடிப்பீர்" என்றாள்.

"உறுப்பாகி, உடலாகி, உயிரு மாகி
ஒப்பற்ற ஓவியமாய் உளத்தில் புக்கு,
நெருப்பாகி எரிக்கிறதென் னுடலை; நின்ற
நீராகி யலைக்கிறதென் னுளத்தை; நீண்ட
பொருப்பாகிக் கனக்கிறதென் னுயிர்மேல்; பொன்றப்
புயலாகி மோதுகிற தெனது போக்கில்!
விருப்பாகி நின்நினைவு வெளியி லென்றன்
வெற்றிதனை விரட்டுதடி கண்ணே!" என்றேன்.

இந்தவொரு சிறியமொழி என்வாய் சிந்த,
இளமுறுவல் தவழும்இத ழுதுக்கி நின்று
சிந்தித்தாள் சிலையென்னச் சிறிது; சேரச்
செங்காலன் னம்போல்கால் விரலால் மெல்ல
நிந்தித்தா ளௌநிலத்திற் கீற லானாள்;
நெட்டுயிர்த்தென் முகம்நோக்கி, நிலத்தில் வீழ்ந்து
வந்தித்தாள்; வரன்பணந்தா ருங்கள்;" என்றாள்
வழங்கினேன் வாரியெல்லாம்! வாங்கிச் சென்றாள்

வழக்கம்போ லந்திமறைந் திரவு தோன்ற,
வானம்பூப் பந்தலென வடிவம் கொள்ள,
வழக்கம்போல் முல்லைமணம் அள்ளித் தென்றல்
வாலிபத்தில் காதலதை வளர்க்க, நானும்
வழக்கம்போல் துயிலாது, வாழ்வை எண்ணி
வைகறையை வரவேற்கக் காத்தேன்; ஆனால்,
வழக்கம்போல் வரவில்லை தாரா! வாயால்
வார்க்கவிலை குரலமிழ்தென் செவியி லன்றே.

தாராவைத் தன்னுடனே அழைத்து வாராத்
தலையாய வைகறையும் கசந்த தாலே,
ஏராரும் பசுங்கிளிதான் கூட்டி னின்றும்,
'இனியெழுயென் குலக்கொழுந்தே! என்ற சொல்லும்,
காராவைக் கறந்துடனே சுண்டக் காய்ச்சிக்
கற்கண்டைப் பொடித்தளவாய்க் கலந்த பாலும்,
பாரோர்கள் பாராட்டும் பண்டைச் சங்கப்
பழந்தமிழ்ப்பாக் களும்பலவும் கசந்த தன்றே!

அகமிங்கே ஆழ்குளமாய் அமைந்தும் 'அங்கே
அதிகாலை அரவிந்தம் மலர்ந்த' தென்னும்
முகமெங்கே? முயற்சியொடு முடிவு காண
முறுவலமிழ் தளிக்கிறமோ கினியின் நெஞ்சே!
சுகமெங்கே! சோர்விருளும் சூழா முன்பே
சொல்விளக்கா யொளியூட்டும் சுடர்தா னெங்கே?
நகமெங்கே சதைவிட்டு நீங்கிற் றென்ன
நானிங்கே நலிகின்றேன், நங்கை யெங்கே!

வான்தாரா வண்ணமதி முகத்தாள்மேனி
வடிவழகைப் பருகிடஎன் விழிகள் தேடத்
தேன்தாரா மதுர மிகு குரலில் பேசும்
தெளிமொழிகள் பருகிடஎன் செவிகள் தேடக்
கான்தாராக் கவின்சுளையாய்க் கருத்துக் கேற்பக்
கற்பனைகள் சுரப்பதற்கென் கவனம் தேட,
என் தாரா வரவில்லை? எனும் வினாவும்
இதயத்தில் கடலலைபோல் எழுந்த தன்றே.

படித்துவைத்த கற்பனைகள் நூலறுந்த
பட்டமெனப் பயனின்றிப் பாழாய்ப் போகக்
கொடுத்து வைத்த பொருளனைத்தும் 'இல்லை' யென்ற
கொடியமொழி கேட்டகுடி மகன்போல் நொந்து,
வடித்துவைத்த சோற்றுக்கும் வகைகா ணாமல்
வாசலிலே விழியிரண்டும் வளர வைத்துப்
பிடித்துவைத்த பசுஞ்சாணிப் பிள்ளை யார்போல்
பிற்பகலெல் லாம்பேசா தமர்ந்தி ருந்தேன்.

விண்ணுக்குள் விளங்கிஇருள் விலக்கா நின்ற
வெய்யவனும் மெய்சோர்ந்து வீழ்ந்தான் கல்மேல்;
மண்ணுக்குள் மமதை மிகு மாந்தர் மாணா
மனமென்ன மாயஇருள் மனைபு குங்கால்
கண்ணுக்கும் ஒளிகாந்தக் காணப் பண்ணும்
கவின்விளக்கை ஏற்றமனங் கருதும் காலென்
புண்ணுக்கு மருந்தாகிப் பொருந்தும் புத்திப்
புலனுக்கு விருந்தாகப் போனாள் வந்தாள்.

கார்முகிலைக் கூந்தலெனச் சீவிப் பின்னிக்
கவின்முல்லை மதியெனவே கமழச் சூட்டிக்
கூர்மிகுவேல் விழியொளிரக் கொவ்வைச் செவ்வாய்க்
குவியிதழில புன்முறுவல் தவழ வந்தாள்,
'பார்மகளன் றிவள்பைம்பொன் னுருக்கி வார்த்த
பதுமையுயிர் பெற்ற தெனப் பார்த்தின் றிங்கெள்
நேர்முகமாய் நின்றதுமே நெஞ்சில் சேர்த்திந்
நெருப்பணைக்கக் கைநீட்டி நெகிழ்ந்து நின்றேன்.

புனைவுற்ற பொற்பாவை, பூனை போன்று
புகுந்தவுடன் மின்விளக்குப் பொறியை யேற்றி,
மனைமுற்றும் ஒளிநிலவச் செய்தாள்; செந்தா
மரையெனவே முகம்மலர்ந்து மகிழ்ச்சி மேலும்
தனையுற்றுப் பார்த்தளனைத் தானும் பார்த்து;
தளிர்க்கரத்தா லென்கன்னம் தடவித் தாங்கி,
எனைவிற்று விடச்செய்தேன் அத்தான்! உங்கட்
கெண்ணாயி ரம்ரூபாய்க்" கெனச்சி ரித்தாள்.

"சேற்றுக்குள் உதித்தமரை மலர்நான் அத்தான்
செங்கதிரோன் தானெனக்கு நீரும்! சிந்தை
ஆற்றிக் கொள் வதுவேண்டாம்! ஆமாம்! இந்த
அகத்தினைவிட் டரைக்கணமும் அகலேன்; நீரும்
மாற்றிக்கொள் ளுங்களினி ஒன்றாய் மாறா
மனத்தினையும்! மனைவியென மகிழ்ந்திப் போதே
ஏற்றுக்கொள் ளுங்களெனை", என்றாள். என்ன
'இருவருமின் றொருவரெ'ன இணைந்தோ மன்றே!

# பரவசம்

பழகி னோர்களைப் பரவசம் பண்ணிடும்
பணிவிடை யே செயலாய்ப் – பாரில்
பகைத்த பேர்களுக் கிதத்தை விளைத்திடும்
பண்புக ளே மொழியாய்
அழகு மிக்களன் ஆருயி ரனையநல்
அற்புதம் பூங்கொடியே! – இனி
அருமை யாயுனைப் பேணுவ தில்என
தாயுளைக் கழியேனோ!

மண்ணி லுள்ளவ ரனைவரு மேயுனை
மதித்தன ரென்றாலும், – 'உரிய
மணாள' னெனமணங் கொண்டு வரித்து
மகிழ்வுட னெனைநாடும்
வண்ண மாமலர் பூங்கொடி! நீயினி
வளமுற வாழ்ந்திடவே – வசையில்
வானம் வற்றினும் என்விழி நீரினை
வார்த்து வளர்க்கேனோ!

கருங்கு யில்எழில் குரலினில் இன்னிசை
கனிந்திடுஞ் சுனையாகிப் – பூங்
காவில் மதுகரப் பாவலர் நாவினில்
கவியெனும் மதுவாகி,
அருமை யானவன் உயிருடன் கலந்திடும்
அதிரச அமுதாகும் – என்
ஆர்வக் களஞ்சிய மேயுனக் கென்மனம்
ஆசன மாக்கேனோ!

தீண்டும் அளவிலென் உயிர்தளிர்த்திடுகிற
தெய்விக வடிவான – இனிய
தேனை னும்படி உன்னெழில் முழுவதும்
தினம்நனி மாந்தியபின்
ஆண்ட மானில அன்னையை வழிபடும்
அழகிய வைகறையில் – உன்
அகங்க மழ்நறு மலர்களைக் கொய்தவள்
அடிகளில் தூவேனோ!

# இன்பச்சிகரம்

சின்னஞ் சிறிய பிறைமதி தோன்றுது
தேன்நில வைப்பொழிந்து – நிறைந்
தென்னித யக்கடல் பொங்குது வானையே
எட்ட அலையெழுந்து!

வான வெளியினில் ஞான வடிவெனும்
வண்ணச் சுடரினங்கள் – பர
மோன நிலையில் முகிழ்த்தன வந்துவென்
முத்தம் தெளித்தது போல்!

அன்றலர் மல்லிகைப் பூவில் கமமும்
அரிய நறுமணத்தை – வரும்
தென்றல் பணிமகள் நன்றென ஏந்தித்
திளைக்க வழங்கிடுவாள்!

ஆகங் குளிருமிவ் வேளையி லாரணங்
காவல் வடிவினளாய்க் – கரு
மேகத் திரையை விலக்கி நகைத்தெழில்
மென்முகங் காட்டுகிறாள்!

போதும் அளவு பருகியே மோகனப்
போதையில் ஆழ்ந்திடவே – பெருங்
கீத மதுவை நிறைத்த நறுந்தமிழ்க்
கிண்ணியை நீட்டுகிறாள்!

என்னை மறந்த நிலையில் விளைந்த
இனிய மயக்கினிலே – அருங்
கன்னிக் கவிதையென் காதலி சீவனைக்
கட்டித் தழுவுகிறாள்!

அன்பும் அறிவும் கலந்த அமிழ்தெனும்
அற்புதம் சேர்க்கையில்நான் – இருந்
தின்பச் சிகரத்திலேறித் திளைக்கிறேன்
இவ்வுல கந்Oதனி லே!

# இரண்டாவது

# அறிவுறல்

# வாடகை வீடு

வீடொன்று வேண்டி இருந்தது – அதுவும்
வீதிப் புறத்தில் விசாலமாய்!
வாடகை ஒன்றரை கூடினும் – சற்று
வசதி யுடனுள்ள தாகவே.
தேடிப் பிடிக்கத் தொடங்கினேன் – தினம்
தெருத்தவறாமல் திரிந்து நான்;
வீடென் றிருக்கும் இடமெலாம் – சென்று
விவரம் முழுதும் வினாவியே!

காற்றுப் புகாத குடிசைக்குள் – சதா
காரிருள் தங்கிடும் பொந்துகள்;
சேற்றக் குழிசல தாரைகள் – சூழச்
சிதலை அரித்திடும் கூரைகள்;
கூற்றுவன் கூடக் குடிபுகும் – புறா
கோழிகட் குத்தக்க கூடுகள்;
நூற்றுக் கணக்கில் இருந்தன – கெட்டு
நொந்து வசிப்பவர்க் காகவே!

தற்பொழு துள்ளஇவ் வீடுதான் – வெயில்
தன்னைத் தடுக்க அமைந்தது;
சொற்ப மழைபெய்த போதிலும் – உள்ளே
சொட்டி வடியத் தொடங்குது!
கற்புக் கரசிதா ராஅவள் – வந்து
காலடி வைத்த மறுகணம்,
வற்புறுத் திச்செப்பிச் சென்றனள்–'இதில்
வாழ்வு தொடங்கத் தகா'தென.

பூவினைப் போன்றெழில் மேனியாள்–என்றன்
புலன்கட் கணிகல மானவள்;
காவியம் போலும் இனியவள் – என்னருங்
கண்ணெனத் தக்க துணைவியை,
கேவல மான இடங்களில் – வைத்துக்
கேடு விளைக்கத் துணிந்திலேன்;
ஆவி கலங்க வருந்தினேன் – செய்ய
யாதென நொந்துளங் குன்றியே!

'வேதனை எல்லையை மீறுது – உம்மை
விட்டுப் பிரிந்திங் கிருப்பதால்;
காதல! வீடு கிடைத்ததா? – அன்றிக்
கட்டி முடிந்ததா? கூறுங்கள்.
சோதனை மேலும்செய் வீரெனில் – உள்ளம்
சுக்குநூ றாகும் உடைந்'தென,
மாதம் இருமுறை காகிதம் – அவள்
மலர்க்கரம் நோக வரைகிறாள்.

நண்பன் ஒருவன் நவின்றனன்– 'மிகவும்
நல்லதோர் வீடுள தங்'கென
எண்பது ரூபாய்தான் வாடகை! – ஈந்தால்
இன்றே ஒழித்துத் தருவராம்!
பண்புடன் முப்பது நாட்களும் – சென்று
பாடுபட் டால்முதல் தேதியில்
உண்ப துடுப்பதற் கேற்பவே வரும்
ஊதிய மேஒரு நூறுதான்!

வாடகை எண்பதும் போனபின் – என்றன்
வாழ்க்கைச் சகடமும் ஓடுமோ?
தேடரும் மாமணி அன்னவென்–உயிர்த்
தேவியொ டிந்தப் பிறவியில்
கூடி மகிழ்ந்திடக் கூடுமோ! – எனினும்
குறித்துப் பதிலும் அனுப்பினேன்!
'வீடு விரைவில் கிடைத்திடும் – கண்ணே
வேதனை விட்டிரு நீ யென்றே!

# வலைக்குள் கலை

நீல வானில் தவழும் பிறையோ
நீணி லத்தில் நிலவ நினைத்து நான்
மேலும் மேலும் பயிலத் தொடங்கினேன்
மேதை யென்னுமப் பாதையை மேவவே!
ஆலை வாயில் கரும்பென நூல்களை
ஆய்ந்து சாறு பிழிந்திடும் வேளையில்,
வேலை யற்றெவ ரேனுமாங் குற்றிடின்
வெறுப்பு, வேதனை, வெஞ்சினம் மிஞ்சுமே!

நெஞ்சு ரம்மிதம் மிஞ்சி யிருந்ததோ
நேர்மை யோஅன்றிக் காரணம் வேறெதோ!
கொஞ்சம் கூடஅஞ் சாமல் சகோதரர்
கோப தாபம் பொருட்படுத் தாமலே
செஞ்சொல் கன்னித் தமிழைப் பயில்வதே
செயலெ னக்கொண் டொழுகிய தால்தினம்
பஞ்சம், பட்டினி, ஏளனம், என்பாள்
பங்கில் தங்கிப் பலுகிப் பெருகவே!

நஞ்சி தென்ன ஒதுக்கி உறவினர்
நாளும் தப்புக் கணக்குகள் போட்டதால்,
பஞ்சின் மெல்லடிப் பாவைதா ராவுளம்
பதைப தைத்துயிர் சோர்ந்து வருந்தவே,
மஞ்சு சூழ்மலை யாய்மலைச் சாரலாய்
மனங்க வர்ந்த அருவிக ளாயெழில்
விஞ்சும் வெள்ளியங் காட்டினை விட்டுநானை
விரைந்து கோவையில் தங்கினேன் வேண்டியே!

கொலைக்குக் கூடத்தம் கூடப் பிறந்தவர்
கூடமாட உதவும் உலகினில்
கலைக்குக் கைதர முற்றும் மறுத்துநான்
கலக்க மின்றி முயன்றுமுன் னேறியும்,
மலைக்குள் சிங்கம் புலிகட்குத் தப்பியே
மகிழ்ச்சி கூர்ந்திடும் வேளை மறதியால்
வலைக்குள் பட்ட கலையென வேமண
வாழ்க்கை யால்தடு மாறி வருந்தினேன்.

ஓட்டை வீட்டில் ஒருசுவ ரோரமாய்
ஒஞ்ச ரித்திரு கண்களும் மூடியே,
மூட்டுந் துன்பப் பிசாசுகள் முன்வரின்
முறுவல் பூத்து விரட்டுக நீ'யெனப்
பாட்டி சொன்ன பழமொழி ஒன்றிலே
படிந்து நெஞ்சம் தடிந்து கிடக்கையில்
வீட்டு வாசலில், கிண்கி ணெனும்ஒலி
விரைந்தெ ழுந்து விடும்படிச் செய்தது!

காக்கிச் சட்டையைப் போட்டகை யாலொரு
கடிதம் கதவின் இடுக்கில் நுழைந்தது;
சீக்கி ரம்அதை நோக்கி எடுத்துநான்
செய்தி காணச் சிறிது படித்ததும்
தாக்கி நெஞ்சைத் துளைத்திடும் அம்புகள்
தாமெ ழுத்துரு வத்தினில் தோன்றின.
நாக்கு லர்ந்தது; மூக்கும் உலர்ந்தது;
நடுங்க வுந்தொடங் கிற்றுடல் யாவுமே!

இதயம் தன்னி லிருந்த நெருப்பினை
எடுத்துக் கொட்டி இருந்தனள் என்கிளி!
'நதியின் போக்கில் புணையின் செல'வென
நன்மை தீமையும் நம்முயிர் வேட்கையின்
விதியை ஒட்டி விளைந்திடு மென்றஎன்
வீறு கோளுரை வெந்து கருகவே
புதிய வேதனை பொங்கி எழுந்தது;
புவியும் சக்கர வட்டம் சுழன்றதே!

# இதய வேட்கை

'இன்னமும் எத்தனைநாள் – தனியாய்
இங்கே இருப்பதுநான்?
'சின்னஞ் சிறுசெயலும் – தப்பாய்ச்
செய்தனை நீ'யென வே
என்னை அலட்டுகிறார் – அப்பா
என்றுமில் லாவிதமாய்!
தன்னந் தனிமையிலே – நொந்து
தவித்துப் புலம்புகிறேன்.

உண்ணப் பிடிக்கவில்லை – இரவில்
உறக்கம் வருவதில்லை!
கண்ணிற் படும்பொருளில் – நீரே
காட்சி யளிக்கிறீரென்
எண்ணம் அனைத்தினிலும் – நீரே
இரண்டற் றியங்குகிறீர்!
பெண்ணென் றிருப்பவரில் – யானோர்
பித்திகொ லோ அறியேன்!

கண்ணைப் பறிக்குமெழில் – இளங்
காரிகை யார்களித்துத்
தண்ணென் முழுநிலவில் – ஒன்றித்
தம்மை மறந்தவராய்
பண்ணின் குரலெழுப்பி – ஆடிப்
பாடி மகிழ்கையில்நான்
வெண்ணெய் எனக்கிடந்து – வீட்டில்
வெம்பி – உருகுகிறேன்!

'கன்னங் குழியும் எழில் – இனிய
கற்கண்டு போல் மொழிகள்
புன்னகை பூத்த முகம் – யாவும்
போக்கினை கெட்டெனவே
என்னருந் தோழியர்கள் – கூடி
ஏளனம் செய்வதெலாம்
பன்னி எழுதுவனேல் – அதுவோர்
பாரத மாகி விடும்!

பருவ மடைந்ததன்பின் – திருமணம்
பண்ணி முடிந்ததன் பின்
வரவும் செலவுமின்றிக் – கிடந்து
வாழ்க்கைத் துணைவர்களின்
பிரிவில் வருந்துகிற – அன்புப்
பெண்க ளனைவருக்கும்
இரவின் திரைமறைவில் – காலன்
இருப்ப தறிகிலிரோ!

காதல் கணவனுமைப் – பிரிந்து
கண்ணைக் கசக்குகிற
பேதை மதியுடைய – சொந்தப்
பெண்டின் துயரறியீர்!
'வேதனை விட்டிருநீ!' – என்று
விளம்பல் எளிதுமக்கு!
சாதல் அதைவிடவும் – எளிது
சதிகளுக் கென்றறிவீர்!

மதிய மெனைப்படுத்தும் – இந்த
மாபெருந் துன்பறவே
இதயந் தனை மலர்த்தும் – என்றன்
இன்பக் கதிரவனின்
உதயமு முண்டெனநான் – இன்னும்
உயிரைச் சுமந்திருப்பேன்!
விதியின் பயனெதுவோ – அதுவே
விளைக! இனியெனவே.

# வரவழைப்பு

வேலை வேண்டி யிருக்கவில்லை – வீட்டில்
வேலை வேறுவீ ணாவதினால்,
மாலை நேரம் மனிதர்களின் – மனம்
மாற்றும் நல்ல மருந்தெனவே,
நீல வானில் கருமுகில்கள் – கூடி
நிறைந்தி ருந்தன தாமெனினும்
சாலை யோடு நடந்துசென்றேன் – வாழ்வில்
சாந்தி தேடிச் சலிப்புடனே!

வயல்பு றங்க ளிருமருங்கும் – பசும்
வண்ணம் காட்டி வயப்படுத்த
குயில்கு ரல்கள் குளுகுளென – மரக்
கொம்பு தோறும் செவிமடுக்க
வியக்கு மாறிரு பக்கலிலும் – உள்ள
வேலிப் பூக்கள் மணங்கமழ
இயற்கை யானஅச் சூழ்நிலையில் – என்றன்
இன்னல் வேர்கள் அறுந்தனவே!

ஆட வன்அதி லும்கவிஞன்–எனும்
ஆண்மை பீறிட் டெழுந்ததுகாண்!
பேடி யாயுளம் நொா ந்ததற்கும் – பின்னும்
பெரிதும் நாணிப் பிணிக்கலுற்றேன்.
ஊடிக் கூடி மனைவியுடன் – உறும்
உறவு பொதுவுல குக்கெனினும்
பாடி இன்புறும் பாவலர்கட் – கிதில்
பங்கும் பகுதி யெனப்பரிந்தேன்.

தனிமை நாடித் தவம்புரிந்து – வாழ்வுத்
தகுதி சுட்டிக் கவிபுனையும்
எனையும் கூட மயக்குவதே – இந்த
இன்ப துன்ப நினைவுகள்தாம்!
மனைவிக் காகவே வாழ்வதெனின் – அது
மணமி லாமல ராகுமெனும்
நனியு நல்லதோர் கற்பனையும் – தோன்றி
நலிவை நல்லதாய் நாட்டிடவே!

கலைஞ னென்ற கருத்துடனே – வந்து
கடித மொன்றை வரைந்துவிட்டேன்!
'மலரு மனைவியு மொன்றெனவே, என்றன்
மனத்தில் வைத்திருப் பேனெனினும்,
பலரைப் போலஇ ராமலினி – இந்தப்
பாரி லேதலை யாயவொரு
சிலரைப் போல இருந்துதவி – என்றன்
செயலைச் செம்மை படுத்திடுக!

அதுநி றைந்த மணமலரே – மனம்
மகிழ்ச்சி யூறு மருஞ்சுனையே!
புதிய யோசனை வேறெதையும் – இனிப்
புரிதல் விட்டுப் புறப்படல்செய்!
இதய மென்றஇம் மாளிகையைத் – திறந்
திங்கு காத்திருப் பேனுனக்காய்!
உதய மாவதைப் பார்த்திருக்கும் – நிசி
உறக்க மற்றதோர் வண்டெனவே!

எண்ணெ யாகவும் நானிருப்பேன் – திரி
என்ன நீயும் இணைந்திருந்து
கண்ணி னுக்கொளி யாயெரிந்து – அடி
கங்குல் தோறும் கவினுறின்நாம்
மண்ணில் வீடு மறுத்திடினும்–போற்றி
மக்கள் யாரும் மதித்திருக்கும்
விண்ணில் வீடு கிடைத்துவிடும் – இனி
விரைந்து வந்திங்கு சேரெனவே!

# புடமிட்ட பொன்

விற்பு ருவமதில் வியர்வை பூத்திடவும் – 'கொஞ்சம்
வெகுளி' எனஅவை மேலும் கோணிடவும்
சிற்பம் உயிர்பெறும் மந்தி ரச்சொல்லால் – எழுந்து
சேர என்னிடம் தேடி வந்ததென,
'நிற்ப தற்கிது போது' மெனஇருந்த – இல்முன்
நெஞ்சு குளிர்ந்திட வந்து நின்றவன்காண்
கற்புக் கரசியென் காதல் தாராவென்–றந்தக்
கதவின் சந்துகள் காண உதவினவே'.

'சரக்கென் றெழுந்ததும் கதவின் தாழ்நீக்கிச் – சற்று
சாய்ந்து நிலைப்படி யோரம் நின்றவளாய்
சிரிக்க முயன்றவனாகியே மொழிந்தேன்:' எனது
சீவன் நலமுடன் வந்து சேர்ந்ததென.
உருக்கம் உவகையோ டுரிமை உணர்வெனவே – பண்புகள்
உந்த ஒருதுளி அதரம் மலர்த்துவளாய்
அரைக்கண் சுருக்கியே அவளும் அகம்பார்த்தாள் – பற்பல
அருத்தம் அதில்நனி பொருத்தி ஆவலுடன்!

கையி லிருந்தஅப் பையை வாங்கியதும் – 'வா'வெனக்
கனிவு காட்டியோர் வார்த்தை கூறியதும்,
'வெயிலில் சென்று களைத்து வந்தவர்க்கே – நிழலாய்
விளையும் இன்பமும் விளங்கு' மென்பதுபோல்
செய்வ தென்னயென் றெதுவு மறியாமல் – 'பேதைச்
சிறுமி' யெனஉமை விட்டு நான்பிரிந்தேன்.
தெய்வ மே!தயை கூர்ந்து மறந்திடுக! – என்றவள்
திக்கித் தேம்பவும் பக்கெ னச்சிரித்தேன்.

'தோட்டந் துரவுகள் சூழ அதனிடையே – எழில்வீடு
தோகை மயில்இன மான்கள் துள்ளிடயே,
கோட்டை கொத்தள மாய மைத்ததிலே – தோழிகள்
கூட இருந்துகுற் றேவல் செய்பவராய்
ஆட்டம் பாட்டுக ளோடு வாழ்வதிலும் – தனது
அன்புக் கணவனின் அருகி லினிதிருந்து
ஓட்டை வீட்டி லிணைந்து வாழ்வதிலே – பெண்ணின்
உள்ளம் நிறைவுறக் கூடும்', என்றனளே.

இன்ன தெனப்பகுத் தியம்ப இயலாத – எதுவோ
இருக்க வேண்டுமோர் சக்தி உங்களிடம்!
பொன்னும் மணியுமென் றுள்ள தெல்லாமும் – வெற்றுப்
பொருள்க ளெனப்பறித் தெரிய வும்செய்தேன்.
என்னை யீன்றஅவ் வூரிலிருப்பதெலாம் – வேம்பாய்
ஏன்க சந்தன என்பதும் அறிவேன்!
என்ன என்னமோ எண்ண வைத்ததுகாண் – இந்த
இரண்டு திங்களு முங்கள் நினைவென்றாள்.

பிறையை வென்றொளிர் நெற்றி மீதினிலே – கலைந்து
பின்முன் னாகிக் கிடந்த கூந்தலையென்
நிறைந்த காதல் நிலைத்த பார்வையுடன் – விரலால்
நெறிப்படும்படி நீவி விடலானேன்.
'சிறிய அறையிது; மேலும் ஒழுகுவது – இன்னும்
சேரும் இடர்பல கோடி உண்டெனினும்
குறையெ னும்ஏது வேனு மொன்றிருப்பின் – அதுவே
கொழுநன் றனைப்பிரிந் திருப்ப தே' என்றாள்.

எதுவொன் றிவளிடம் இருக்க வேண்டுமெனப் – பன்னாள்
எண்ணி நானெதிர் பார்த்தி ருந்தேனோ
அதுநி றைந்தவ னாகி யேவந்தாள் – புடமிட்
டற்பு தச்சுடர் வீசும் பொன்னெனவே!
புதிய சிந்தனை பொதிந்த வார்த்தைகளைத் – தாரா
புகலக் கெட்டுடல் பூரித் தவனானேன்!
மதியு லாவிய வான மண்டலம் போல் – நெஞ்சில்
மகிழ்ச்சி யாகிய நிலவு மேவியதே!

# மலையும் மயிலும்

பச்சைப் பயிர்கள் வளர்ந்திட வென்றோ
பால்ப சுக்கள் பருத்திட வென்றோ
இச்ச கத்தில்பல் லாயிரங் கோடி
இனிய சீவன்கள் வாழ்ந்திட வென்றோ
நிச்ச யம்செய்து கொள்ள நினைத்து
நீண்ட நேரம் நெருங்கி யுசாவி
உச்சி வானில் குழுமி முகில்கள்
ஒருங்கு மின்னி உருமுதல் கண்டே!

மதிமு கத்தில் மலர்ச்சி மறைந்து
மனது நொந்தனள் தாரகை மெத்த!
பதைப தைப்புடன் நானு மெழுந்தேன்.
பதுங்கி நிற்பதற் கோரிடம் தேட!
'இதய மென்மலர் வன்பிணி தீர
இன்றெ முந்தது கார்முகி' லென்று
புதிய போதை பொருந்தப் பொலிந்து
போற்றுந் தோகை எழில்மயி லொன்று!

குடியி ருந்தஎன் வீட்டுக்கு முன்னால்
கோவி லில்குடி கொண்டுள்ள தேவி
கடிம லர்ப்பொழிப்பைம்புற் றரையில்.
கவின்மி குந்ததோர் காட்சியி தென்ன.
இடிமு ழக்கினுக் கேற்ப வியங்கி
இலங்கும் தோகை குலுங்க விரித்து.
படியி லும்ஒரு சொர்க்கமுண் டென்னப்
பரத நாங்கடியம் பண்ணிட லாச்சு!

விண்ண கம்எனும் பெண்மணி பாடி
வீணை மீட்டி விளைக்கும் இசைக்கு
மண்ணில் மாந்தர் மகிழ்ந்திடு மாறு
மாம யில்களித் தாடுதல் கண்டு,
கண்ணி ரண்டும் பெறும்பய னின்று
காணப் பெற்றவன் போன்று களித்தென்
எண்ணம் சொல்செய லென்பன வெல்லாம்
இழந்து சித்திர மொத்தவ னானேன்.

குடியி ருந்தஎன் குடிலுக்கு முன்னால்
கோவி லில்குடி கொண்டுள்ள தேவி
கடிம லர்ப்பொழில் பைம்புற் றரையில்
கவின்மி குந்ததோர் காட்சியி தென்ன,
இடிமு ழக்கினுக் கேற்ப வியங்கி
இலங்குந் தோகை குலங்க விரித்து
படியி லும்பர மானந்த மென்னப்
பரத நாட்டியம் பண்ணிட லாச்சு!

விண்ண கம்விழை வித்தகி யாகி
வீணை, மீட்டி விளைக்கு மிசைக்கு,
மண்ணில் மக்கள் மகிழ்ந்திடு மாறு
மாம யில்மதித் தாடுதல் கண்டு
கண்ணி ரண்டும் பெறும்பய னின்று
காணப் பெற்றவ னாகிக் களித்தென்
எண்ணம் சொற்செய லென்பன வெல்லாம்
இழந்து சித்திர மொத்தவ னானேன்.

ஒப்பி லாஎழில் பீலி யுகைப்பில்
உணர்வ னைத்து மொருங்கதி லொன்றி
இப்பி றப்பினி லெய்துவ தின்றே
இயைந்த தென்று வியந்திட நானும்
கப்ப லொன்று கவிழ்ந்த போன்று
கண்க லங்கக் கவலையி லாழ்ந்து
எப்ப டியினித் தப்புவ தென்றே
ஏங்கி னானென்றன் தூங்கா விளக்கும்!

பேரெ ழில்தனைச் சேரப் பெருக்கிப்
பிரிய மாய்நட மாடும் மயில்மேல்,
மாரி முத்துக்கள் வாரிப் பொழிந்து
மகிழ்ச்சி கூர்ந்து புகழ்ந்ததும் வீட்டுக்
கூரை பாரியாய் மாறித் தரையைக்
குளமெ னும்படிச் செய்தது மொன்று!
சாரை சாரையா யூறிச் சுவர்கள்
சகதி யாகிக் களைந்த திரண்டு!

சாறு காய்ச்சிய கட்டி படகாய்ச்
சகதி நீரில் மிதந்தது மூன்று!
வேறு வீடொன்று பாருங்க ளென்று
வேத னைக்குரல் நான்குடன், வேறு
நூறு நூறு விதம்தினம் நெஞ்சு
நொந்த ழச்செயும் வெந்துயர், – யாவும்
ஆறிச் சீவன் தழைக்கப் பருகும்
அமிழ்த மென்னத் திகழ்ந்ததக் காட்சி!

# ஏமாற்றம்

அந்த நல்ல நாளுக்காகவே – **கவிஞன்**
ஆண்டி ரண்டும் காத்தி ருந்தனன்
மந்த மாரு தத்தின் வரவெதிர் – பார்த்து
மனது மாழ்கும் மாங்கு யிலெனவே!

காத்த நாளும் வந்து, ஓர்ந்தது – கவிஞன்
கவலை சற்றுக் கழிய நேர்ந்தது!
பூத்த கொம்பு போன்று புத்தகம் – அழகு
பொலிய நன்கு புதுக்கி யாச்சுது!

மங்கு மந்த மாலை வேளையில் – இனிய
மலர்ம ணங்க மழ்ந்த காற்றினில்
தங்கள் மேனி தளர்ச்சி நீங்கவே – செய்த
தவமு மின்றுதந்த தென்னவே!

நீல வானில் மின்ன லாமென – அருகில்
நேச முள்ள மனைவி நிற்கவே,
மாலை, மஞ்சள், குங்கு மத்தோடும் – கவிஞன்
மனைமுன் காத்து மகிழ்ந்தி ருந்தனன்.

நாளும் போது மாக ஊரினர் – ஒளி
நல்வி ளக்கு நயந்து நல்கவே
ஆறாம்அருமைத் தெய்வம் வந்தது – அன்பொ
டாசி கூறி யவலம் நீக்கவே!

அடியெ டுத்து வைக்கு மிடமெலாம் – மலர்கள்
அள்ளி யள்ளிச் சொரியத் தமனியக்
கொடிய சைந்த தென்னத் தெய்வமும் – கவிஞர்
குடிலைத் தேடிக் கொண்டு வந்தது!

'இந்த வூரில் கவிஞ னில்லமும் – இருக்கும்
இடமெ தெ'ன்று தெய்வம் வினவவும்
தந்தி ரத்தில் காசு சேர்ப்பவன் – தோன்றித்
தனது வீட்டுத் தடத்தைக் காட்டினான்!

சிலையைப் போல்பு தைந்து நின்றனன் – கவிஞன்
'செய்வ தென்ன' வென்ற திகைப் பொடும்,
'கவிஞன் வாழ்க' வென்னுங் கூக்குரல் அங்கு
காது செவிடு படவொ லித்ததே!

# சொல்லும் செயலும்

அந்தி மயங்கும் சமயத்தி லேஅம
ராவதி யாற்றங் கரைதனிலே – அந்தச்
சுந்தரக் காட்சியில் சிந்தை சுகத்தினில்
சொக்கி யமுங்கி யிருக்கையிலே!

சின்னஞ் சிறுபிறை என்னவோ சீக்கிரம்
செப்ப விரும்பிச் சிரித்ததனால் – அதன்
கன்ன லுரைகளைக் கேட்கக் கருதியென்
காதைக் கொடுத்துக் களித்திடவே!

'ஏனெனக் கேட்க எவருமிங் கில்லையோ
ஈசா இதுமுறை யோ' வெனவே – ஒரு
தீனக் குரலென் செவியில் விழுந்து
திடுக்கிடச் செய்தது, 'ஆ' வெனவே!

தேவன் பெயர்சொல்லிக் கூவி யுரைத்திடத்
திக்கு திசைதெரி யாதவரோ? அந்தோ!
பாவம், பாவம்! அவர் யாரெனப்பார்த்துப்
பயத்தை யாற்றிட லாமெனவே.

கருணையைக் காட்டும் தருணத்திற்காகவே
காத்துக் கிடந்தவன் போன்றெழுந்து – சென்றேன்
மரணத் துயர மெனினும் சரியதை
மாற்றுவ தென்ற மணந்துணிந்து!

எல்லையில் லாத மணங்கமழ்ந் திவ்வுல
கெங்குமெல் லாரையு மின்புறுத்தும் – எழில்
முல்லை பெறும்நனி நல்ல மலர்கள்
முகிழ்க்கும் அரிய பசுங்கொடியும்

சேயற்ற தாயெனத் தன்னுளஞ் செத்துச்
செயலு மிழந்து தரைதனிலே – பெரும்
நோயுற்ற வாறுதன் வாயுற் றழுதுமெய்
நொந்து கிடந்தது தூறயிலே!

கல்லுங் கரையக் கசங்கிக் கிடக்குமக்
காட்சியைக் கண்டு கவலையொடு – ஆகா!
முல்லையே! சொல்லுனக் குற்ற துயரம்
முழுவது மென்னிடம் பற்றுடனே!

கல்லின் வலிதெனச் சொல்லஇப் புற்றரை
காய்ந்து கசங்க வருத்தியதோ? – இல்லை
மெல்லிய மேனியிவ் வெல்லைப் பொறாமலே
மெத்தவும் நைந்து குலைந்தனையோ?

வண்ண மலர்க்கொடி யாகிய வுன்னுடல்
வாட்டம் தவிர்த்து வளமுறவே – வானத்
தண்ணமு தென்னக் குளிர்ந்த பெருமழைத்
தாரைகள் வேண்டித் தவித்தனையோ?

உன்றளிர் மேனி யுலைவினுக் கேவலு
வூட்டும் மருந்தை யுதவிடவே – அந்தத்
தென்றல் மருத்துவி யின்றும்வ ராததால்
தேம்பி யழுது திகைத்தனையோ?

உண்டு மகிழும் உறவின ராகி
யுவந்துனை நித்தமும் நாடிவரும் – கரு
வண்டுகள் கொடை மதுவெறி யாலே
வருத்தமுண் டாகவே வைதன வோ?

ஏறிப் படர்வதற் கேற்ற கொளுக்கொம்பொன்
றில்லையே என்பது காரணமோ – அன்றி
வேறெது வோஎது வாயினும்நீசொல்ல
வேண்டுமுன் வாய்திறந் தென்னிடமே'

என்று வினவி யிதய முருகியே
இன்முகங் காட்டுகையில் – மனங்
குன்றிக் கிடந்தஅக் கோமள முல்லைக்
கொடியு முரைத்தது காண்.

மானிடர் கண்ணில்ப டாமல் மறைந்து
மகிழ்ச்சியாய் வாழ்வதற்கே – இது
தானிட மென்ப தறிந்துநா னிங்கு
தனித்துத் தழைத்திருந்தேன்!

உயிரி னினிய வுடைமைக ளாமென்
நூரிய மலர்களையின் – றெனது
வயிறெலாம் பற்றி யெரிந்திட வந்தொரு
வனிதை யபகரித்தாள்!

கருந்தன மென்னப் பொருந்திய என்னருங்
காதல் கவின்மலர்கள் – ஐயா!
மருந்துக்கொன் றின்றி வருந்தவே வந்தொரு
மங்கை யபகரித்தாள்!

இப்படிச் செய்தபின் இவ்வுல கத்தி
லிருந்துயிர் வாழுவது – இனி
எப்படி? ஐயனே! எப்படி? எவ்விதம்?
என்ன வகையிதற்கு?

கொல்லையில் வாழுங் கொடியன்று நாணிக்
கொடுமைப் படுவதற்கும்!' – என்று
முல்லை மொழிந்த முறையிது கேட்டு
முறுவ லொடும் மொழிந்தேன்;

'பாரி பிறந்தஇப் பைந்தமிழ் நாட்டினில்
பச்சைப் பசுங்கொடியே! பிறர்க்கு
வாரி வழங்கும் வழக்கறி யாதுநீ
வாழ விரும்புவதோ!

தமிழை வளர்க்கும் கவிஞன் தழைத்திடத்
தண்தலை தந்தவனும் – அருங்
குமணன் பிறந்த குவலயந் தன்னில்
கொடேனென்று கூறுவதோ!

உன்னிட முள்ள வுயர்ந்த தனைத்தும்
உலகுக் களித்திடுக! – எனத்
தன்னிக ரற்றநம் காந்தி யடிகளும்
தம்திரு வாய் மலர்ந்தார்!

ஈந்தவ ரன்றி யிருப்பவ ரெல்லாம்
இறந்தவ ராகிடுவார் – இது
மாந்தர்க்கு மாத்திர மன்று; மலர்க்கொடீ!
மற்றுனக் கும் பொருந்தும்!

வாடி வதங்கி யுதிர்ந்துலர் கின்றவுன்
வண்ண மலர்களெலாம் – மாதர்
நீடிய கூந்தலில் சூடல் நலமென
நெஞ்சு நெகிழ்ந்து ரைத்தேன்.

கூம்பிக் கிடந்த குலக்கொடி முல்லையும்
கூர்ந்திதைக் கேட்டவுடன் – நல்ல
பாம்பெனச் சீறிப் பகர்ந்தது மேனி
பதறப் படபடத்தே!

'சொன்னதைச் சொல்லுங் கிளியெனச் சொல்லவே
சொந்தமில் லாதசொற்கள் – சொல்லி
என்னையு மேய்க்க இயம்புவ தில்பய
னெள்ளள வில்லைஐயா!

சொல்லும் விருப்பம் முளதெனிற் சொல்லுக!
சொந்த அனுபவத்தை – அது
இல்லை யெனின்சற் றிருந்தினிச் செல்லுக!
இவ்விடம் விட்டெனவே!

நல்லவர் சொல்லினில் முல்லைக்குங் கூடவா
நம்பிக்கை யற்றது நாட்டிலென ஒரு
எல்லையில் லாத இடும்பையில் மூழ்கியே
என்னை மறந்தித யம்மெலிந்தேன்.

ஈகை யெனுமின் வியல்பினைச் செய்கையில்
இக்கொடிக் கின்றுகாட் டாதவனாய்
ஏகுவ தில்லை யினியென நொந்தென்
னிதய மிடகுறும் வேளையிலே!

செக்கச் சிவந்தநன் மேனியன், வாலிபன்
சிந்தை முழுது முருக்குகிற
துக்கம் மிகுந்த முகத்தின னக்கணம்
தோன்றியே நின்றனன் கண்ணெதிரில்!

சொந்த வுறவின ரான வொருவரின்
சுந்தரச் சாயல், சுறுசுறுப்பும்
அந்த இளைஞனின் மேனி யகம்புற
மாக அமைந்ததிசயமே!

முல்லைக் கொடியின் முகமும் கவிழ
முறையுட னிங்கிவ் வினையனுக்கு
நல்ல விதத்தி லுதவியே நானுமென்
நன்மதிப் பைநிலை நாட்டிடவே.

பொன்னான வேளை பொருந்திய தென்னப்
புகல்பவ னாகிப் பொருமலுடன்,
'என்னா லியன்றதைச் செய்தவன்; தீர்ப்பதற்
கென்ன குறையுளக் குண்'டெனவே!

நெஞ்சம் படபட வென்றுதுடிக்க
நெகிழ்ந்து நெருங்கியே நானவனைக்
கொஞ்சமும் கூடக்கூ சாமல் தழுவியே
கூறெனக் கூறினேன் கோமளமாய்!

ஆறுத லானஇவ் வூறகல் சொற்களா
லவனு மகமகிழ்ந் தார்வமுடன்
கூறினன் கூறத் தகாத குறைகளென்
கும்பி பகீரென் றெறிந்திடவே!

கால னெனச்சொலு வாரெனைக் கண்டவர்;
கண்க ளிரண்டுமில் லாதவன்நான்!
ஞால மிசைவலு வானவ ராமொரு
நல்ல மனிதனை நாடிவந்தேன்!

நாழிகை யைமணி யாக்கி யிரவினை
நண்பக லாக்கியு மோட்டுகிறேன்;
ஊழிக ளைச்சிறு வேளைக ளாக்கி
உலகை யுருட்டியுங் காட்டுகிறேன்!

கண்ணுக்கு முன்னொரு 'காணத் தகுந்தநற்
காட்சி' யெனக்கை யொலியெ ழுப்ப,
மண்ணில் மறைந்தொரு சின்ன விதையை
மராமர மாக்கியும் மாற்றுகிறேன்.

சின்னஞ் சிறுவுரு, பண்ணும் மழலைச்
சிறுமியை யேந்திச்சீ ராட்டயிலே,
கன்னலி னும்நனி நல்ல சுவைதரும்
கற்கண்டுக் காரிகை யாக்குகிறேன்!

சந்திரன் சூரியன் விந்தை மிகுந்ததோர்
சத்துரு மித்தரு வாயமைத்து,
அந்தி பகலெனப் பந்தப் படுத்தியே
ஆனந்த மூட்டுவே னாயிடினும்

ஈகை யிரக்க மிருக்கு மொருவகை
இவ்வுல கெங்கணும் தேடியேஎன்
தேக மிளைத்தது, தேய்ந்தன காலும்;
தெரிந்தது நீரிங் கிருப்பதுவும்!

'கண்ணிரண் டுந்தெரி யாத குரு'டென
காசினி மீது சனித்துவிட்டேன்,
அண்ண! இரண்டுகண் ணுண்டெனி லொன்றை
யளித்தெனைக் காத்திட வேண்டு'மென்றான்.

முல்லைக் கொடியின் துயரைத் தவிர்க்க
முயன்றது முற்றிலு மேயெனக்குத்
தொல்லையாய் வந்து தொலையத் தொடர்ந்தொரு
துன்பமுங் கூடவே தோன்றிடுது'

கண்ணையும் காசென எண்ணுகின் றானிவன்
கயவ னெனவே யினியெதனைப்
பண்ணுவதென்று பயந்தது நெஞ்சம்
பதறிய தென்னுட லும்முயிரும்!

'கண்ணப்ப நாயனா ராகிக் கலங்கிடும்
காலமும் வந்துற்ற தோ'வெனவே
எண்ணவும் பண்ணிய தென்தலை எந்திர
மென்னவும் பண்ணிச் சுழற்றியதால்!

செப்படி வித்தையைச் செய்தனன் 'சீ' யெனச்
சிந்தை கலங்கிய தும்மயங்கித்
தொப்பெனப் புற்றரை மேல்விழுந் தேன்உயும்
தோதெது வும் துலங் காதவனாய்!

உதவி புரிகிற வுத்தம நற்குண
முள்ளஎன் அண்ணலே! மேடுகுழி
எதுவுமில் லாத இடத்தினில் தொப்பென
இப்படி யேன் விழுந்தீர்க'ளென்றான்

'உன்னைநான் தொட்ட அளவிலென் னுள்ளத்
துணர்வு முழுதும் தொலைந்து; – அடா!
என்னுயிர் கூடவுடலைவிட் டிப்பொழு
தேகிற் றெனவுள்ள' தென்கிறேன்.

'காணாமற் போகு முயிரைக் கணத்திலே
கண்டெடுத் துத்தரு வேனுளம் சற்றுங்
கோணாமற் சீக்கிர மாயொரு கண்ணைக்
கொடுத்தருள் செய்யுங்க' ளென்றனன்.

'ஆழந் தெரியாமல் காலைவிட் டேனடா!
அற்பனே! நீ கெடு வாயடா!' – என்றேன்
கோழையைப் போலப் புலம்பவே. முல்லைக்
கொடியு முரைத்தது கோபமாய்!

'சொல்லுக்குச் சொல்லழ காகவே சொல்லியென்
சோகந் தவிர்த்திடச் சொன்னநீர் – ஐயா!
சொல்லைச் செயலினில் காட்டெனச் சொல் லவே
சொக்கி மயங்கி விழுகிறீர்!

பாரி குமணன் கதைகளைக் கூறிப்
பரிபவம் தீர்க்கப் பரிந்தநீர் – கொஞ்சம்
நேருக்கு நேர்செய்து காட்டெனக் கூறவே
நினைவு தவறி விழுகிறீர்!

பாரி லிருக்கும் வரையினி யேனும்
படிப்பினைப் பாங்கறியாமலே – நாளும்
ஊருக் குபதேசம் செய்வதை மட்டும்
உடனடி யாய்மறப் பீரென!

காரிய மில்லை யினியிருந் தென்னக்
கசந்தவ னாகி யெழுந்ததும் – மெல்ல
ஊருக்குப் போகும் வழிபிடித் தேனொரு
உமையைப் போலன்று நானுமே!

'தேவியே! என்குறை தீர்த்திடு வாயெ'னத்
தெருவினில் கோவிலைக் கண்டதும் – நொந்து
கூவவே, 'ஏனிதோ வந்தவிட் டேனெ'னும்
குரலும் குளுமையாய்க் கேட்பது.

'கலகல' வென்ற சிரிப்புடன் கூடவே
காதல் களிமயி லன்னவள் – வந்து
'பலபல' வென்று விடிந்த தெழுங்கள்
படுக்கை சுருட்டலா' மென்றனள்!

# அன்னையின் ஆணை

அன்னை யாருயிர்த் தெய்வமுள் ளன்பெனும்
அளப்ப ருங்கட லானவ ளார்வமாய்த்
தன்னை முற்றிலு மென்னலம் பேணவே
தந்த வள்!தள ராத வுழைப்பினள்!
சின்னஞ் சிறிய கதைகளைச் செப்பியென்
சிந்த னைக்கு விருந்துசெய் வித்தவள்;
பன்ன ரும்நலன் தேடி யளித்தவள்
பாயின் மேல்கிடந் தாளுடல் நோயினால்!

சிரத்தை யோடிர வும்பக லாகவே
செயல்மு றைப்படி வந்துதன் தேர்ச்சியைப்
பொருத்தி வைத்தியம் பார்த்த மருத்துவர்,
பொழுதி றங்கிடப் போய்விடு மிவ்வுயிர்
வருத்த முற்றுப் பயனிலை, அன்னையின்
வாழும்நாட்க ளனைத்தும கழிந்த'தென்
றருத்த மாக வுரைத்துவிட் டேகவும்,
யாது செயலென் றனங்கிட லாயினேன்!

உறவி னர்பலர் கூடி யிருக்கவும்,
ஊரி னர்வரப் போகவும், வீட்டினில்
பிறவி மறைவுக் கிடையுள்ள வாழ்க்கையின்
பெருமை, சிறுமைகள் பேசி யளக்கையில்,
முறுவல் பூத்த முகத்தின ராகிவே
முன்றி லில்இளம் பிள்ளைக ளாடவே,
உறுவ தென்கொலென் றூக்க மிழந்துநான்
உளமு டைந்துலை வெய்திட லாயினேன்.

அந்திப் போதெனை நொந்திடச் செய்ததால்,
அங்கம் யாவு மாடித் தளர்ந்தன!
சொந்தத் தாயி னுயிரைக் கவரவே
சோரன் போல்வரு மந்திப் பொழுதெனை
நிந்த னைமொழி சிந்தியென் நெஞ்சினில்
நீக்க மற்ற துயரம் நிறைகையில்,
விந்தை யன்னை விரும்பி யழைத்தெனை
வேட்க நோக்கி யமர்த்தி விளம்பினாள்!

'வண்ண மேனி வலுவைக் குலைத்துநோய்
வாளி னிக்கணம் வாங்கியே என்னுயிர்
விண்ணி லேற்ற விரும்பினன் காலனும்;
விதிமு றையுமிது வாதலின் நீயிதை
எண்ணி யுள்ளம் அழித லிழி'வென
ஈன்ற தாய்தன் னிறுதி யியம்பவும்,
கண்ணி ரண்டு மருவீக ளாகவே
கலுழ்ந்து கேவிக் கதறிட லாயினேன்!

சேர அன்னையின் சிந்தை யறிந்திடச்
'செய்வ தென்'னென நைந்து வினவக்கண்
ணீரை நீக்கு; நிலை குலை தல்தவிர்!
நெஞ்சைத் தேற்றிக்கொ ளென்மக னே!யெனக்
கோர, அக்கணம் நானது கொள்ளவே
கூறி னாளன்னை கூர்த்த மதியொடும்!
ஊரி லுள்ள – உழைப்பவர் கண்ணிலே
ஒரேஎ வொருதுளி நீரொழு காவிதம்,

உதவி யொப்புர வாகவே வாழ்ந்திருந்
துண்மைக் காக வுயிரை மீந்தொரு
முதுபெ ருங்குடி மூத்த மகனென
முயன்று முறைநெறி மேற்கொண் டொழுகியே,
எதுவந் துறினுமோ ரென்னை வச்சமும்
இன்றி வாழ்ந்திரு!" வென்றன னேற்றுநான்
அதுவு மின்று முதல்கொண்டு வாழுவே
னன்னை!" யென்னஅவ் வாவி யகன்றதே!

# அறிவுறல்

அன்ப மைந்த அகமே! எங்கள்
அறிவ மைந்த புறமே!
இன்ப மைந்த இகமே! – உங்கள்
இயல்பி லங்க வைப்பேன்!

எல்லை யற்ற எழிலால் – கமழும்
இனிய நறும ணத்தால்
முல்லை மலர்க ளெனவே – தமிழின்
முகம்ம லர்த்த முயல்வேன்!

கள்ள மற்ற கண்கள் – கவினே
கலந்த மைந்த மேனிப்
புள்ளி மானைக் கொல்லும் – பொல்லாப்
புலியைப் பூட்டி வைப்பேன்!

கொஞ்சு கின்ற – கொவ்வைக் காரியைக்
கூறு செய்த – செவ்வாய்
விஞ்சு மழகுக் கிளியின் – சிறையை
வீட்டி வாழ விடுவேன்!

வெயிலெ ரிக்கும் வேளை விடலையர்
விரும்பிப் பாடும் சோலைக்
குயிலைக் கொத்து கின்ற – காக்கைக்
குறும்ப டக்கி வைப்பேன்!

துன்பு றுத்து மிருளைத் – துரத்தித்
தூய நிலவு குத்திங்
இன்பு றத்தும் மதியைத் – தேயா
திலங்கு மாறு செய்வேன்!

தாழ்வ னைத்தும் தள்ளித் – 'தரணியின்
தாமு யர்ந்த' தென்னும்
வாழ்வ மைத்து நானும் வைகல்
வனப்பை வாழ்த்து வேனே!

# கொண்டுணி

அளக்கு மளவி லமைந்த வகலம்
ஆழம், நீளம், அழகென லான
குளக்க ரைதனில் குந்தியே, கூவல்
கொக்கு ரைத்ததன் றக்கரை யோடு!

'ஆழ மானதண் ணீரினில் வாழும்
அருமை யானஓ மீன்களே கேளீர்!
பாழும் தூண்டி லுடன்வரு கின்றான்
பாவிச் செம்பட வன்அதோ பாரீர்!

நீரி லென்றும் பிறந்து வளர்ந்து
நிலைத்து வாழ்கிற நீங்களெப் போதும்
ஊர் லுள்ளஇம் மானிட ரென்போர்
உள்ளந் தன்னை யுணர்ந்திட வில்லை!

மனித னுக்கொரு தீங்குசெய் யாமல்
மண்ணைப் பற்றியு மெண்ணிப்பா ராமல்,
இனிது வாழ்ந்திட என்னினு முங்கள்
இன்னு யிர்க்கிவ னேயெம னாவான்!

உங்கள் பசியைத் தணிப்பதற் காக
உலகில் மனித னுதித்திட வில்லை!
தங்கள் பசியைத் தணிப்பதற் கும்மைத்
தான்பி டிக்கத் தவிர்ப்பதுமில்லை!

பலத்தி லவனை நிகர்பவ ரில்லை;
படிப்பில் மெத்தவும் கைவரப் பெற்றோன்
நிலத்தி லவனை யெதிர்த்தின்று நேரில்
நிற்க வேறுபி ராணியொன் றில்லை!

ஆண்ட வன்றனை வேண்டுவன், கொல்ல,
அவலம் புழுவினைக் கோத்ததும் நீரில்
தூண்டில் வீசித் தொலைத்திடு வான், நீர்
தூரம் போய்மறை வீர்விரைந் தென்றே.

# இரக்கம்

குருடன் தானவன், குருடன் தான்வழி
கொஞ்ச மும்தெரி யாமுழுக்
குருடன் தானவன்! எனினும் மக்கள்
குலத்தி லவனு மொருத்தனே!

வந்து சென்ற பகல்க ளொடுமினி
வரவி ருக்கும் பகல்களும்,
நைந்த இரவுக ளாகி அவன்வாழ்
நாட்கள் முழுவதும் நகர்வன!

எங்கி ருந்தவன் வருகி றானினி
யெங்கு செல்ல முயல்கிறான்,
இங்கு வழிமிக இடறு தொடருக
ளெவ்வி தங்கடந் தேகுவான்.

கான கந்ததனி லுள்ள கவின்மயில்,
கரடி, புலியெனும் கருத்தினில்
வான வில்லையும்காதில் வாங்கியே
வைத்தி ருப்பவ னாயினும்,

மற்ற மனிதர்கள் போல மாதரின்
மங்க லத்திரு முகங்களை
உற்றுப் பார்த்தொரு போதிலும் தன
துள்ளம் மாசு படுத்திடான்!

'கேவ லம்,ஒரு குருட னெனப்பிறர்
கேலி செய்வது மிகமிகப்
பாவம்! அவன்வழி முழுவ தும்உயிர்
பதற நெருடித் தவிக்கிறான்!

எண்ணிச் செல்லு மிடத்தை யினியவள்
இடறு றாதுசென் றெய்திடக்
கண்ணு ளோரெவ ரேனு மொருதடி
கையில் கொடுத்துத வுங்களே!

# மாண்பு

'மனம்போன்று மாண்பெனு' மென்சொலை நீயும்
மறவாமல் நெஞ்சினில் கொள்ளடா!
இனம்போன் றிருப்பவ ரின்சொல் – 'ஏற்றம்
இல்லை' யென் சொல்லித் தள்ளடா!

அயர்வும் மயக்கமும் நீக்கடா! – நாளும்
ஆற்ற லறிவினைத் தேக்கடா!
உயிரிலே வுயிரென் வூக்கடா! – உன்னை
யுண்மை மனிதனா யாக்கடா!

நினைவு முழுவதும் நேர்மையில் – நிற்க
நினைத்து நினைத்துப் பழகடா!
மனதை யுயர்த்து மளவிலே – மண்ணில்
மாந்த ருயர்வென் றொழுகடா!

தேடக் கிடைக்காத சொத்தடா! மாண்பே
தேசத்தைக் காத்திடும் சித்தடா!
நாடும் புலமையின் சத்தடா! – நாளும்
நன்மை விளைக்கின்ற வித்தடா!

இன்னல்க ளுன்னை யெதிர்க்கினும் – எஞ்சா
தேற்றத்தை யேஎன்று மெண்ணடா!
சின்னஞ் சிறியதே னீயெனச் – சேர்ந்து
சிறந்த செயல்களைப் பண்ணடா!

எண்ணி யெண்ணித்தினம் தேரடா! – நல்ல
இயல்பினை யேவெளி யாக்கடா!
மண்ணிற் பிறந்த மனிதரில் – நீயோர்
மாணிக்க மாவதை நோக்கடா!

என்னடா! என்னடா! என்னடா! – எங்கும்
இன்பம் விளைத்திட எண்ணடா!
கண்ணும் கருத்துமா யெண்ணடா! – எண்ணின்
கடைத்தேற லாமிந்த மண்ணிலே!

# பராக்கு

அச்ச மற்றிரவில் – மகிழ்ந்தே
ஆடு மென்குழந்தாய்!
உச்சி வான்றனிலே – இளம்பிறை
ஊர்ந்து செல்வது பார்!

பொன்னின் மலர்பூத்த – பூங்காப்
போலு மெழில் வானில்
மண்ணுந் தாரகைகள் – மலர்ந்து
மகிழ்ந்தி ருப்பனபார்!

சின்னஞ் சிறியனவாய் – வானில்
சிதறி யிருந்தமுகில்
துன்னி யிளம்பிறையைத் – தொடர்ந்து
தொல்லை தருவதும் பார்!

'வண்ணக் கருமுகிலே! – நீயென்
வழியை மறைத்தாலுன்
கண்ணைக் கரைத்திடுவேன்', எனப்பிறை
கடிந்து ரைப்பதைப் பார்!

'அடிவ யிற்றினிலே – கண்கள்
அமைந்தி ருக்கிறது,
பொடிய னே போடா!' – எனமுகில்
பொரிந்து விழுவதும் பார்!

'வயிற்றில் கண்களையும் – முதுகில்
வாயும் வைத்திருந்தால்,
இயற்றும் தொழில் போர்தான்!' – எனப்பிறை
இகழ்ந்தி யம்புதல் பார்!

நாக்கறுந்தது போல் – முகிலும்
நாணி வாயடைத்தங்
கேக்கம் O  டழவே – கண்ணீர்
இறங்கி வருவதும் பார்!

# குறும்பு

'காட்டில் திரியும் கடும்புலி ஐயகோ!
காலை கடுகிவந்து – நமது
வீட்டில் புகுந்ததென் றண்ணன்வீ ரிட்டனன்
விண்ணதி ரும்படியாய்!

'மின்னட்டும் கண்கள், மிரட்டட்டு மிப்புலி,
மீனாவை, யும்பிடித்து – மென்று
தின்னட்டு மென்றனன், அஞ்சித் திகைத்துஎன்
தெய்வமே!' என்றழுதேன்.

அன்னை விரைந்தங்கு வந்தன ளென்னவோ
அக்கப்போ ராகுதென – அடா!
என்னடா, எப்புலி, எங்கு புகுந்ததென்
றிதயம் பதறிடவே!

'காடுமே டாகக் கரந்துறை யும்புலி
காப்புள்ள வீட்டினிலே – புகக்
கூடுமோ டா! குறும் புப்பய லே'யெனக்
கோபித்துக் கொண்டனள்தாய்!

அக்கம்பக் கத்தினி லுள்ளவர் வந்தனர்
'ஆபத்து யா'தெனவே – அண்ணன்
'கெக்கெக்கெக்' கேயெனப் பல்லைப் யிளித்தனள்
'கேளிக்கை யின்'றெனவே.

அட்டைப் படத்தி லிரட்டைச் சுடர்விழி
ஆவெனும் வாயுடனே – உள்ள
துட்டப் புலியதை வெட்டி யெடுத்துத்
துலங்கிடக் காட்டுகிறான்.

பட்டில்பூப் போட்டது போன்றுடல் பார்க்கப்
பளபளக் கின்றத ப்பா! – பையத்
தொட்டதைப் பார்த்திட வேண்டியென் நெஞ்சும்
துடிதுடிக் கின்றதப்பா!

# போதனை

'எதற்காய் வாழுவ' தெனுமறி வில்லார்க்
கிருப்பதும் இல்லையடா! – என்றும்
'இதற்காய் வாழுவ' தென்பவர்க் கில்லா
திருப்பதும் இல்லையடா!

பொய்யிது வொன்று பொருந்திடின் போதும்,
பொலிவினைப் போக்கிவிடும்! – என்றும்
மெய்யிது வொன்றுனை மேவிடின் போதும்
மெலிவினை நீக்கிவிடும்!

நல்லவ னாய்நாம் வாழ்வதி லொருதுளி
நாத்திகம் கிடையாது! – என்றும்
அல்லவ னாய்நாம் வாழ்வதி லொருதுளி
ஆத்திகம் கிடையாது!

களவும் காவும் கற்றவன் இருளில்
காசினை எண்ணுகிறான்! – என்றும்
தெளிவும் திறவும் கற்றவன் அருளில்
தேசினை நண்ணுகிறான்!

செய்வ தனைத்தும் செறிவுறச் செய்தால்
சிறுமையும் சென்று விடும் – என்றும்
உய்வ தனைத்தும் உறவுறச் செய்தால்
உரிமையும் ஒன்றிவிடும்!

மணங்கம ழாத மலர்களில் மதுரம்
மாத்திரம் இல்லையடா! – என்றும்
குணங்கம ழாத குலங்களில் குதிரும்
கோத்திரம் இல்லையடா!

காசொடு குலவும் கதியினைக் கண்ணில்
காண்பதை இழந்திடினும் – என்றும்
'மாசொடு குலவும் மதியின' னெனநீ
மாண்பதை இழக்கா தே!

# அவனும் அவளும்

'சந்தைச் செலவுக்குக் காசில்லை' யென்றவள்
சங்கடம் செய்திடுவாள்; - அவன்
'அந்திப் பொழுதெனும் செம்பென் புதையலை
அள்ளி யெடுத்திடெ'ன்பான்.

'எந்திர மென்ன இயங்கியே என்னுடல்
எலும்புதோ லாச்சுதெ'ன்பாள்; - அவன்
'சந்திரன் நின்முகங் கண்டதும் வெண்முகிற்
சந்தில் மறைந்த தென்பான்.

'நல்ல நகையொன்று மில்லாத தால் நாணம்
நாக்கைப் பறிக்கு தெ'ன்பாள்; - அவன்
'எல்லையில் லாஎழில் முல்லை முகைநகை
ஏக்கம் தவிர்க்கு தென்'பான்.

'பெண்டான நாள்முதல் கண்டாங்கிச் சேலைக்கும்
பித்தேறி விட்ட தெ'ன்பாள் - அவன்
கண்டாங்கி யென்னும்பேர் தண்டா மரைக்கிடீன்
காதுங் களிக்கு மென்பான்.

'உற்றா ருறவின ரற்றுநா மின்றிங்
கொருகுடி யானோ'மென்பாள் - அவன்
'பற்றற்ற வாழ்விலிப் பாரெங்கும் சுற்றம்
பரிணமிக் கின்ற தெ'ன்பான்.

'காற்று மழைவரின் கீற்றுக் குடிசைநட்
டாற்றில் விடுமே'யென்பாள்; அவன்
'ஆற்று மணலிடை தோற்றும் நிலவினில்
ஆனந்தம் காண்போ'மென்பான்.

'செம்புத்தண் ணீரன்றிக் கும்பிப் பசிக்கின்று
செய்குவ தென்ன'வென்பாள், – அவன்
'தும்பிக ளாய்த்தமிழ்க் கவிதை மலரில்
துதைந்து புசிப் போ' மென்பான்.

# விவசாயம்

மணஞ்செய்த மறுவருடம் தனிலி ருந்தே
மாதரசி தாரா,மல் கட்ட லானாள்
'பணம்செய்து கொண்டுவரா விடா லென்னால்
படைக்கமுடி யாதுணவு பாங்கா' யென்றே.

'புளி காரம் போடாம லுப்பைப் போட்டுப்
புது விதமாய்ச் சமைத்திட்டால் போது' மெனறேன
'பழிகார ரிதையறிந்தால், நம்மைப் பற்றிப்
பார்முழுதும் பரப்பிடுவா ரிழிவை' யென்றாள்.

'நாம்நமக்காய் வாழுவதே யன்றி மற்றிந்
நாட்டார்க்காய் வாழல் நல மாகா தென்றேன்.
போம்நுமக்குப் பொழுதுபோ காவிட்டால்நும்
புதுவிதத்தைப் பொறுக்கியெடுத் துக்கொண்' டென்றாள்.

'உள்ளதனை வைத்துக்கொண் டுண்மை யாக
உலகத்தில் வாழ்வதுதா னுசித மென்றேன்
'பள்ளியிலே படித்துவந்த பாடத் தாலே
பசிருசிதா னொருபோதும் படியா' தென்றாள்.

என்னசொன்ன போதும்துளி காதில் வாங்கா
தெதிர்த்தெதிர்த்துப் பேசுவதை யெதிர்த்து நானும்
கன்னத்தி லொப்புக்கோ ரடிகொ டுத்தேன்;
கண்ணையவள் கைகளினால் கசக்கிக் கொண்டே,

'என்னென்ன படவேண்டு மென்றத் தெய்வம்
என்தலையி லெழுதியதோ அறியே'னென்று
பன்னியழத் தொடங்கிவிட்டா லதனைக் கண்டு
பாகாக வுருகிற்றன் றெனது நெஞ்சும்!

ஆயிரம்நூல் கற்றாலு மென்னே பெண்ணே!
அதிபதியாய் வாழ்ந்தாலு மென்னே, பெண்ணே!
நேயப் பெண் கண்ணீரைக் கண்டு, நெஞ்சம்
நிலைகுலையா ஆண்மகனெங் கேனு முண்டோ?

'பெண்மையே வெற்றிபெறு' மென்று முன்னோர்
பேசினது பன்முறைநான் கேட்ட துண்டு;
உண்மையாய் நேரிலதைக் கண்டேன்; காண
உடைந்ததுள மொழுகிற்றென் கொள்கை யெல்லாம்!

பரிவான குரலிலிது பகர்ந்தேன்; பெண்ணே!
பண்டையவன் னடிக்கடனைத் தீர்த்தே னேனும்,
இரவான வாழ்விதனை வேண்டே னீயாய்
எகுகிறேன் பொருள்தேட இனிநா' னென்றே.

எனதுமறு மொழியால்தன் னிதயந் தன்னில்
இன்பமிகுத் திருப்பதனை யியம்பா ளாகித்
தனதருமைக் கன்னத்தைத் தடவி னாளாய்த்
'தகாத செயல் செய்தீர்நீ ரன்றோ இன்று!

எத்தனையோ நாள்தவம்நான் செய்து பெற்ற
வெழிலார்ந்த கனியெனவே இனிக்க, நீங்கள்
முத்தமிடும் கன்னத்தி லடித்து, நோவை
மூட்டிவிட்ட ரிதைமறக்க முடியா' தென்றாள்.

வார்த்தையிலே சினம் நிறைந்து வடிந்த தேனும்
வடிவழகி யவள் முகத்தை வலிந்து கூர்ந்து
பார்த்ததிலே எனைப்பகடி பண்ணல் போலட்
பட்டதனால் கலகலென நகைத்தே னன்றே!

# மனமாற்றம்

'எட்டடித்து நிமிடமிரு பதுவு மாயிற்
றின்னும்மோர்க் காரிவர வில்லை; நேற்றே
வெட்டொன்று துண்டிரண்டாய்க் காசு கேட்டாள்.
வெகுளாது, 'பொறுத்தி'டென வேண்டிக் கொண்டேன்;
பட்டணத்தில் கைதனிலே பைசா யின்றிப்
படுந்துயர மெடுத்துரைக்கப் படுவ தன்றே!
ஒட்டுமொத்தம் பட்டினிதா னொருநாள் பூரா!
உடல்வற்றி வுருக்குலைந்தா ரெனது மக்கள்!

'எப்போது முலஇயல்புக் கேற்கா நூல்கள்
எழுதுவதுங் கற்பதுவு மியல்பா யிற்று!
அப்பப்போ ததிசயமா யைந்தும் பத்தும்
அனுப்புகிறார் யார்யாரோ! அதுவு மன்றி
ஒப்புக்கென் னப்பாவு முதவு கின்றார்
உலகத்தின் மெச்சுதலுக் குள்ள மின்றி,
எப்போது தானிதற்கோர் விடிவு காலம்
ஏற்படுமோ! என்றலுத்துக் கொண்டாள், தாரா!

கோபமெனக் குத்தாங்கக் கூட வில்லை;
குணங் குறைத்துக் கொள்வதற்கும் துணிய வில்லை!
பாபுபடும் பசியிசிவைப் பரிந்து பார்த்துப்
பரிதபித்துக் கொள்வதிலும் பயனொன் றில்லை!
'ஆபத்துச் சமயத்தில் பாப மில்லை!
அம்மணியே! அட்டாயிற் றெமது வீட்டில்;
தீபத்துக் கெண்ணெயெனச் சோற்றை யூட்டித்
தேற்றிடுக, சிறுவனை நீ!' யென்றாள் செல்லம்!

பக்கத்து வீட்டம்மாள் பரிவி னாலே
பாபுபசி யொருவாறாய்ப் படிய லாச்சு!
துக்கத்தைக் கண்ணீராய்ச் சொரிய விட்டென்
துணைவிதுடி துடித்தவரை யென்முன் தோன்றி,
"அக்கிரம மிவ்வாறாய் நீங்க ளிங்கே
அலுங்காமல் குந்திக்கொண் டிருப்ப தந்தோ!
மக்களொடு மனைவியென வுங்க ளுக்கும்
மண்ணுலகி லெதற்காக வேண்டு" மென்றாள்.

எதுவொன்று மியலவில்லை யென்னால் பேச;
இத்தனைக்கும் காரணமென் னியல்பே யன்றோ?
பதுமையென இருந்தவனைப் பார்த்து மேலும்,
'பசிதணிய வேண்டுமெனின் பரிந்து சென்று
கதுமெனவே பணந்தேடி வாரீர்! இல்லை,
கருணையுட னெமைப்பிறந்த வீட்டிற் கேனும்
பதிலின்றி யனுப்பிவைப்பீ' ரென்றாள், தாரா!
'பார்க்கலா மப்படித்தா' னென்றேன், நானும்!

பார்க்கலாங் கீர்க்கலா மெல்லாம் வேண்டாம்;
பரபரப்பா யெழுந்திருங்க' ளென்றாள், தாரா!
'ஊர்க்காக நானமுது தீர்த்தால் கொஞ்சம்
உபயோக மாயிருக்கு' மென்றெ ழுந்து,
தாற்கச்சி பட்டவொரு மாட்டைப் போலத்
தடதட'வென் றங்கிருந்து, நடக்க லானேன்;
மோர்க்காரி யெதிர்ப்பட்டாள்; "ஐயா! மொத்தம்
முன்பாக்கி கொடுத்துவிட்டுப் போங்க" ளென்றாள்.

மந்திரத்தால் கட்டுண்ட மாநா கம்போல்,
மறுமொழியொன் றுரைக்காமல் நின்றேன்; மாறாய்ச்
"சுந்தரமென் றொருகவிஞ ரிங்குள் ளாரா?
சொல்லுங்க ளவரிருந்தால், சுருக்காய்ப் பார்க்க
வந்தேன்நான் நெடுந்தொலைவி லிருந்திங் கென்றே
'வனப்புடனே கைகுவித்தான்; 'வருக' வென்றேன்
இந்தமனி தன்வரவால் மோர்க்கா ரிக்கும்
எதுவும்சொல் லாதுதுளி யிருந்தே னெண்ணி.

வாலிபனென் பதுமட்டு மன்று; சால
வளர்ச்சியொடு பேரழகன்; வருத்த மற்றோன்!
மேலுமுப சரிப்புக்குக் கொஞ்சம் பேசி
மெதுவாக "வந்ததுநீ யெதற்கா" யென்றேன்.
"வேலுமயி லென்றழைப்பா ரென்னை! மேற்கே
விநயபுரம் மிட்டாதா ரெனது தந்தை!
நாலேநா ளுள்ளதினி யென்கல் யாணம்!
நானும்மை யழைத்தேக வந்தே" னென்றாள்.

கனவொன்று காண்பதெனக் கடுகி நானும்
கண்துடைத்துக் கொண்டவனைக் கனிந்துபார்த்தேன்
மனைவிகத வருகினிலே மறைந்து நின்று
மகிழ்வதனை யறிந்து கனவன்றென் றோர்ந்தேன்.
எனதுமனம் வாலிபனைப் பற்றி யன்றங்
கெதையெதையோ இசைவுபட எண்ணும் போது,
தனது திரு மணவழைப்புத் தாளொன்றொடு,
தாராள மாய்ப்பணமும் வைத்துத் தந்தான்.

"காசுபண மிதுவெல்லா மெதற்கா" யென்றேன்
"கவிஞர்புறப் படுங்கால்கைச் செலவுக்" கென்றாள்.
நேசமொடு நின்பணத்தை யெடுத்துக் கொண்டு
நேரத்தி லூர்போய்ச்சே' ரென்று சொல்ல
யோசித்தேன்; யோசனையைத் தன்யூ கத்தால்
உணர்ந்தவுடன் தாரா, 'வேண்டாமே' யென்று
பாசத்தால் கண்சமிக்கை செய்தாள்; வீட்டில்
படும்பாட்டை யுங்குறிப்பால் படிக்க லானாள்.

திறந்தவிட வாய்திறந்த படியே நின்று
திருதிருவென் றிதைப்பார்த்துத் திகைத்துத் தன்னை,
மறந்திருக்கும் மோர்க்காரி பாக்கி வேறு
மனத்தைமிக வருத்திற்றங் கென்ன செய்ய?
இறந்தாலுந் தேவலைபோ லிதய மென்னிற்
றிவ்வுலகத் தியல்பிழிந்த தாயிற் றென்றே
பறந்துபறந் தலைத் தவனும் பரிவாய்ப் போனாள்;
பரவசமாய்ப் பணமெண்ணிப் பார்த்தாள், தாரா!

சற்றுவெளி யேசென்று வந்தா லிந்தச்
சங்கடமெல் லாமும்சா மெனநா னெண்ணி
முற்றத்தில் காலிட்டேன், தாரா வந்தென்
முன்னின்று வழிமறித்து முகத்தூ டென்னை
உற்றுப்பார்த் தாள்; வெளியே போகா தீந்நீர்!
ஒருநொடியி லுணவளிப்பே னுண்டு குத்தி
இற்றைக்கே னும்சற்றிங் கின்னல் தீர
இளைப்பாறி யின்புறுங்க ளென்றா ளன்றே!

# பதற்றம்

அரைநூறு வருட வாழ்வில்
அறவழி யறிந்து றைந்தென்
னுரைசெய லொன்றி யோயா
துழைத்துப்பார்த் தாயிற் றுள்ளம்
பெரிதும் நொந் துறுதி தேய்ந்து
பெற்றது பிணிமூப் பன்றி,
ஒருசிறு நலனு முற்றிங்
குருப்படக் காண்கி லேனே!

எனவுளஞ் சலித்துத் தேக
மிளைத்தெலும் புக்கூ டாகி,
இனிவளஞ் செய்த லென்னா
லியலாதென் றிருந்தே னேங்கி!
கனிவுளங் காட்டிக் கண்ணில்
வேலையும் காட்டிக் காக்கும்
மனைவியும், 'மக்கள் வாயில்
மண்விழுந் ததுகா' ணென்றாள்.

உகிர்சுற்றின் மீது லக்கை
ஊன்றிய தெனவே, உள்ளம்
மிகமிகப் பதறி "யென்ன?
என்னடீ! விழுந்த" தென்றேன்.
சிகையினை முடிந்த வாறே
சிரிப்பொடு வெறுப்பும் சிந்திச்
'சுகமுடன் பூனை பாலைச்
சுடச்சுடக் குடித்த' தென்றாள்.

'குடியடி யோடு குன்றிக்
குலைந்தது போலச் சீவன்
நடுங்கிட வோடி வந்து
நவின்றது மிதற்குத் தானா?
கிடக்குதின் றொருநாள் தானே
குடித்தது சரி, போ!" வென்றேன்
மடமட வெனவே மேலும்
மலர்த்தினா ளவள்தன் வாயை!

கரும்பூனை காலை மாலை
கட்டாயம் வந்து தீரும்!
ஒரு நாளா! இரண்டு நாளா?
ஒன்றரை மாத காலம்!
வரும்போது பார்த்து நானும்
வைததை விரட்டி வைப்பேன்;
இருப்பினும் வந்தின் றந்தோ!
யேய்த்தெனை வென்ற' தென்றாள்.

ஒன்றரை மாத காலம்
ஓயாமல் விரட்டி வைதும்
நின்றபா டின்றிப் பூனை
நிலையாக முயன்ற தாலே,
இன்றதற் கிணையில் லாத
வெற்றியாய் விட்ட தன்றோ?
நன்றது! நானும் பூனை
நடப்பைமேற் கொள்ளவே னென்றே,

துள்ளியே எழுந்தேன், 'வீட்டின்
துயர்தீர்க்கும் வழியுன் னாலே
கள்ளி நான் கண்டே' னென்று
களிப்புடன் தழுவ லானேன்.
உள்ளுணர் வோராப் பேதை
ஒட்டாளா யொதுங்கி நின்று
பிள்ளையைப் போன்று, நீங்கள்
பிதற்றுவ தென்னிஃ' தென்றாள்.

# துன்பமோ துன்பம்

கூட்டினிலே சிக்கியவீட் டெலியின் துன்பம்
கொப்பத்தில் சிக்கியகுஞ் சரத்தின் துன்பம்,
காட்டினிலே கட்டைபிளந் தடுக்கிக் கட்டிக்
கால்நோகச் சுமந்துவரும் கடையர் துன்பம்,
மேட்டினிலே யேறாத வண்டி யோட்டி
மேலுதவிக் கெதிர்நோக்கி மெலியும் துன்பம்
வீட்டினிலே மூட்டை, கொசு விருதுக் காளாய்
விளைகின்ற துன்பத்துக் கிணையா காதே!

சீட்டாட்ட மாடிப்பைத் தேட்ட மெல்லாம்
சிறுகதினம் சிந்திச்சீ ரிழந்தோன் துன்பம்;
பூட்டில்லாப் பெட்டியிலே பொருளை வைத்து;
பொழுதெல்லாம் வயலையுழப் போனோன் துன்பம்;
தீட்டாத கத்தியினால், திரும லைக்கண்
தெரியாமல் மழித்ததலைச் சிறுவர் துன்பம்
வீட்டினிலே மூட்டை, கொசு விருந்துக் காளாய்
விளைகின்ற துன்பத்துக் கிணையா காதே!

ஊட்டியிலே உடைபோது மளவி லின்றி
ஓரிரவு போர்வையிலா துறங்கும் துன்பம்;
கூட்டலிலே கழித்தலிலே கூர்மை யில்லாக்
குழந்தைக்குப் புரியவைக்கும் குருவின் துன்பம்;
வேட்டையிலே வழிதவறி வெயிலாய்த் தண்ணீர்
வேட்கைமிகுங் கானகத்தில் வேடன் துன்பம்;
வீட்டினிலே மூட்டை, கொசு விருந்துக் காளாய்
விளைகின்ற துன்பத்துக் கிணையா காதே!

நாட்டினிலே ஊர்தோறும் நடந்து சென்று
நல்லவர்யா ரெனநாடிக் காணும் துன்பம்;
ஏட்டினிலே மாணவர்கள் தேர்ச்சி யெய்த
இரவினிலே உறக்கமறக் கற்கும் துன்பம்;
ஓட்டினிலே இருந்துண்டிங் கொவ்வோர் நாளும்
உயிர்பேணத் திரியுமிர வலர்கள் துன்பம்;
வீட்டினிலே மூட்டை, கொசு விருந்துக் காளாய்
விளைகின்ற துன்பத்துக் கிணையா காதே!

# நான் ஒரு குருவியானால்...!

இரவ லாயேனும் – ஒருசிறு
இமைப்பி னளவேனும்
குருவி யாய்வாழ்ந்தால் – அதுவொரு
கோடி சுகமாகும்!

மெய்ம றந்துதினம் – இதய
மின்ன லாமொளியை
வைக றைதனிலே – இசையாய்
வடித்து வழங்கிடலாம்!

துள்ளுங் கன்றெனவே – மண்ணில்
துகளை முப்பி வரும்
பள்ளிப் பிள்ளைகளுக் – கினிய
பழமு திர்த்திட லாம்!

காத, லர்வருகை – காணாக்
கற்புக் கன்னியர்க்காய்த்
தூது சென்றிடலாம் – பிரிவு
துயரம் தீர்த்திட லாம்;

பச்சை இளந்தளிர்கள் – பரிவாய்ப்
பயந்த மலரருகில்
உச்சி வேளைதனில் – குந்தி
உவகை யெய்திட லாம்!

குளிர்வ னங்களிலே – கோலக்
கொடிகள் கூட்டினிலே,
தளிர்ப்ப டுக்கையிலே – இரவில்
தனித்து றங்கிடலாம்!

புவியில் மானிடனாய்ப் – பிறந்து
போது மென லாச்சு!
கவலை கண்டறியாக் – குருவி
கணமும் வாழ்க்கையிலே!

# குழந்தையைக் காணோம்

குழந்தையொன்று வேண்டுமெனக் கூறக் கொண்டாள்
குவலயமே மகிழவொரு குழந்தை தந்தாள்!
பழந்தமிழும் கொழுந்தோடிப் படர்வ தென்னப்
பாலகியை நான்பரிவாய் வளர்த்தேன்; காலை
எழுந்துவெளி யேசெல்ல இருந்தேன்; 'என்னை
எடுத்துக்கொள்' ளென்றதுவந் தியலா தென்றேன்
விழுந்துபுரண் டழலானாள்; வெளியே சென்றாள்;
வீட்டுக்கு வரவில்லை; – எங்கோ காணோம்!

பசுவுக்குப் புல்வாங்கப் பைசா வின்றிப்
பரிதவித்துக் கொண்டிருக்கும் போதும் வந்து;
குசுகுசெனச் செவியருகில் குனிந்து, 'தங்கக்
குணுக்கொன்று வாங்கித்தா அப்பா!' என்றாள்.
வசியம்செய் புன்முறுவல் வழங்கு மந்த
வடிவழகென் னுளமுருக்க, 'முடியா' தென்றேன்
விசித்துவிசித் தழலானாள்; வெளியே சென்றாள்;
வீட்டுக்கு வரவில்லை, – எங்கோ? காணோம்!

கொத்தாரும் பூம்பொழிவில் கூடி யாடிக்
குடுகுடென வந்தெனது மடியில் குந்திச்
செத்தாருக் குயிரூட்டும் தமிழ்வாய் தன்னில்
தேனெழுக இளங்குதலை, மொழியா 'லப்பா!
முத்தாரம் வாங்கித்தா!' என்றாளம்மா!
முடியாதென் னா'லென்றே னுடனே பொத்தல்
சித்தாடை யால் கண்ணை யொற்றிக் கொண்டே
சென்றவள்தான்; வரவில்லை; – எங்கோ? காணோம்!

மண்ணணிடையே வெண்ணிலவில் வட்டம் சுற்றி
மலர்க்கரத்தி னிதழ்விரலால் சுட்டிக் காட்டி,
'விண்ணணிடையே மிளிர்கின்ற தங்கத் தட்டு
விலையில்லை யெடுத்துத்தா அப்பா!' என்றாள்.
பண்ணணிடையே தெறிக்கின்ற இன்பச் சொற்கள்
பரவசம்செய் தெனைவருத்தப் 'பலிக்கா' தென்றேன்.
கண்ணணிடையே கருமணிகள் கசங்கும் வண்ணம்
கைகொண்டு பிசைந்தாளைக் காணோம்! காணோம்!

# பிரிவு

உன்னை 'யுறுதுணை' யென்ன அடைந்தஎன்
உள்ள முடைந்திடவே - அடீ!
என்னரு மைத்துணை வீ!யெனை விட்டுநீ
யின்று பிரிந்தனையே!

வாழ்க்கை வறுமையில் வாடினும் வாழ்ந்தனை
வையகம் வாழ்த்திடவே! – அடீ!
ஊழ்கை கொடுக்க மறுத்திட்ட போதிலும்
உள்ள முவந்தனைநீ!

அருகி லிருந்தும் அறிய மறந்தவுன்
அன்பி னரவணைப்பை – இனி
உருகி நினைத்து நினைத்துக் கசிந்திடும்
உள்ள முருக்குலைந்தே!

வானெனும் வண்ணத் திரையினில் நின்வர
லாறு முழுவதையும் – எழில்
மீனெனும் நல்ல எழுத்துக்கள் கொண்டு
மிளிரப் புனைந்திடவோ?

கவிஞன் கரத்தினைப் பற்றிநீ காட்டிய
காட்சி முழுவதையும் – இந்தப்
புவியில்சொல் லோவிய மாகப் புனைந்துனைப்
புத்துயி ரூட்டிட வோ!

நன்று விரிந்த மலர்களி லுள்ள
நறுமண மவ்வளவும் – உள்ளம்
ஒன்றி யிருந்தவள் வாழ்வில் கமழ
உலகம் வியந்திடுமோ!

அல்லி மலர்ந்து கமழ்கையில் வந்தொரு
அசடன் பறிப்பதுபோல் – காலம்
ஒல்லவே வந்துன் னுயிரைப் பறித்தது
வோஎன் னுயிர்த்து ணையே!

# தடுமாற்றம்

உயிருக் குயிரெனும் உத்தம
நண்பரெலாம், 'உணர்வில்
உயர்ந்தவன் நீ'யெனவே,
'பெயரும் பொருளும் பெருமையும்
பேண வுறும் - பதவி
பெறமுய' லென்றுரைத்தார்!
துயர முறாதநல் தூயவான்
மீனினங்காள்! - உங்கள்
தோழமை வாய்க்குமருஞ்
செயல்களைச் செய்யஎன் சிந்தனை
செல்வதுமேன்; - என்ன
செய்வ தினியிதற் கே!

கூடப் பிறந்தசகோதரர்
கூறினர்காண்! - மாட
கூடங்க ளாயமைத்திங்
காடலும் பாடலும் மாகவாழ்
வோ'மெனவே; - ஒன்றி
அன்புட னாதரவாய்!
தேடக் கிடைக்காத தேசுடை
மீனினங்காள் - உள்ளம்
தெளிந்திட வில்லையிதில்!
நாடுவ னுங்களைப் போலொளி
நல்கிட வே - இந்த
ஞாலந் தனிலிருந்தே!

பெற்று வளர்த்தவர் பெரிதும்
விரும்பியது – செல்வம்
பேணிப் பெருக்கிய பின்,
குற்றங் குறையுமில் லாமல்பல்
லாண்டுகள்தான் – இந்தக்
குவலயத் தின்புற வே!
முற்றிலும் பொன்னுடல் பெற்றநல்
மீனினங்காள் – ஆசை
மூளவில் லையிதிலும்!
சுற்றமா யுங்களைப் பெற்றுச்
சுடருவதே – சாலச்
சுகமென எண்ணுகிறேன்!

'வாழ்விலும் தாழ்விலு மொட்டியே
வாழ்வெ'னென – வாய்த்த
வாழ்க்கைத் துணைவியவள்,
'ஏழ்கடல் வைப்பினி லுள்ளநல்
இன்பமெல்லாம் – இனி
ஈகுவ' னென்றுரைத்துத்
தாழ்வறு மேல்நிலை யில்சுடர்
மீனினங்காள் – பிரிவுத்
தழலினில் தள்ளிவிட்டாள்!
ஊழ்வினை கூட்ட மறுப்பினும்
நான் முயல்வேன் – உம்மோ
டொருவனா யொன்றுதற்கே!

# மூன்றாவது

# துறவுறல்

# சிந்தாகுலம்

சோம்பல் மிகுந்தவர் தேம்பித் திரியச்
சுகங்கள் சுருங்குதல்போல் - ஆற்றில்
தீம்புனல் வற்றித் தெருவெனக் காணத்
திடுக்கிடு தென்னிதயம்!

பூமிக்கும் பொய்கையே பொன்னணி யாயினப்
பொன்னிற் பொதிந்தமணி - யென்னும்
தாமரை யல்லி குவளை மலர்கள்
தவித்துயிர் தாமிழக்கும்!

தோழமை யோடும் தொடர்ந்து வசிக்கிற
துள்ளுங் கயலினங்கள் - நீர்க்
கோழியுங் கொக்கும் புரியும் கொடுமை
குறித்துக் குலைந்திறக்கும்!

'காப்பதற் கான கருணை நதியெமைக்
கைவிட்டு விட்ட'தெனக் கத்துந்
தோப்புந் துரவு, வயல், குளம் யாவும்
துயரத்தில் தோய்ந்து விடும்!

கிளிக்குரல் மாதர் களிக்கப் பருதி
கிளிம்பிடும் முன்னெழுந்து - தன்னில்
குளிக்க வராம லிருப்பின் துறையும்தன்
கோல மிழந்துவிடும்!

பரந்த அலைக்கரம் நீட்டி யணைத்துப்
பரிந்து தழுவிடவே – ஆற்றின்
வரவெதிர் பார்த்துக் கருங்கடல் கூட
வருந்திடக் கூடுமெனின்.

'கடுகள வும்பய னின்றியே காய்ந்ததன்
கல்லும்மண் ணும் தெரிய – அந்தோ!
அடியொடு வற்றிடுமாற்றை நினைக்கையில்
அழுகையும் பீரிடுதே!

# எழில்மலர்

உலகிலோ ரேவொருநாள் – வாழ்ந்திட
உதித்த எழில்மலரே!
இலகுமெந் தமிழெனநீ – எங்கணும்
இனிமை பரப்புகிறாய்!

கண்ணையும் கவருகிற – காட்சிக்
கவினுடன் கலந்தொளிரும்
வண்ணமும் வாய்த்தனைநீ! – வசிய
வடிவமும வாய்த்தனைநீ!

'தவத்தினி லுற்ற'தென – 'இயல்பாய்த்
தானிது பெற்றதெ'ன
புவித்தலம் புகழ்கிறது – போற்றிப்
புனைந்தகம் மகிழ்கிறது!

வன்மையும் தன்தலையை – வணங்கி
வழுத்திடத் தக்கவொரு
மென்மையைப் பெற்றனைநீ! – நறுமண
மேன்மையை யுற்றனைநீ!

பிறந்திடும் முன்பெனக்குள் – இந்தப்
பெற்றிமை தெரிந்திருந்தால்,
இறந்திடும் மதுகரமாய்ப் – பிறந்துனைச்
சேர்ந்து மகிழ்ந்திருப்பேன்!

அறுபது நாழிகைதான் – வாழ்க்கை
அமைந்த துனக்கெனினும்,
பெறுவத னைத்துமே – பெற்றனை
பெருமித மெய்திடவே!

ஆண்டொரு நூறுவரை – நானிவ்
வவனியில் வாழ்ந்திடினும்
பூண்டவுன் புகழ்தனிலே – ஒருதுளி
பொருந்திடப் பூணுவெனோ!

# புகழ்

'புகழெ' னும்நிலை புவியிற் பொதுவெளியில்
போகப் புறப்படுவேன்; - புகும்
யுகயு காந்தம் உவப்புலராதநல்
லொளியி லுறைந்திடவே!

தாறு மாறுக ளற்றுத் துலக்கிய
தார்மிக வாழ்வுதனில், – அரும்
பேறு நான்கையும் பெற்றவ ரெய்தும் (புக)
பெரும்பய னுற்றதென!

'நல்ல செயல்களில் வல்லவர் யாவர்க்கும்
நல்வர' வென்றெவரோ – அங்கு
சொல்லும் நல்லுரை யென்செவி யோர்க்கும் (புக)
சுபத்துக் கறிகுறியாய்!

ஊக்க முண்மை யுழைப்புகளொன்றி
யுறுதுணை யானவுடன் – முற்றும்
யாக்கை பெற்றவ ரவசியம் நாடி (புக)
யடையு மிடமதுவாம்!

இருள்க விந்திடும் வேளை யறிவெனும்
இன்பம் பிறையொளிரும் - ஈனப்
பொருள்கு வித்தவர் போல்கதிர் காயின்மெய்ப் (புக)
புன்கம் நிழல் குளிரும்!

'பற்றில் லாதநல் லுள்ளம் படைத்தவர்
பாத மலர்ச்சுவட்டில் – பெரும்
வெற்றி' யென்னு மெழுத்துகள் பொன்னில்
விளங்கப் பதிந்தனகாண்! (புக)

தேவ னாகவே சீவன் நினைவெனும்
தேசில் கலந்திடவும் – தொழும்..........
சாவு மாயுடல் வேவது நோக்கிச்
சகமு மகங்கொளுமோ! (புக)

# எழு!

ஆடிய தொட்டிலி லுள்ள குழந்தையை
அன்புக் கரங்களினால் – அன்னை
வாடும் பயிரினை நாடும் மழையென
வந்தெடுத்துத் தழுவ,
கூடிய தூக்கம் தெளிந்தவை யாகித்தம்
கோமளக் கண்மலர்ந்து – வண்டினம்
பாடிய இன்னிசைப் பாடலைக் கேட்டதும
பரவச மாய்ச்சிரிக்க,

பூமி முழுவதும் போர்த்து மறைத்தஇப்
புன்மை இருள்படலம் – சற்றும்
தாமத மின்றித் தயாளமில்லா தவர்
தம்மகம் சேர்ந்ததென,
சேமமாய்த் தூங்கி விழித்தன மென்றுநம்
சிந்தை பரவசமாய் – எழில்
தாமரை யாதி மலர்களும் தையலர்
தம்முகம் போல்மலர,

கண்படும் வேளையில் கண்கள் நடுங்கஇக்
கங்குல் முழுவதுமே – பெய்த
வெண்பனி வேதனை செய்தது வென்று
வெகுண்டன வாயெழுந்து
பண்பும் பயனுமில்லாத பனியேநீ
பாழாகிப் போவெனவே – மிகப்
புண்படும் நெஞ்சுடன் வைவன போலுமப்
புட்கள் குரலடங்க,

பொன்னொளி வீசிக் கதிரவன் தோன்றுமுன்
புன்னகை பூத்துடனே - என்றும்
என்னுயி ருக்குயி ராகித் திகழ்ந்திடும்
இன்பத் தமிழ் மொழியே
உன்னையு மென்னையு முய்விக்க வுள்ள
உயர்ந்த சுவைக்கவிதைக் - கலை
தன்னை வளர்க்கத் தலைநிமிர்ந் தேயெழு
தாரணி யோங்கிடவே!

# புறப்பாடு

நடந்து கொண்டி ருக்கிறேன்
நாடொ றும்நா ணாவலாய்,
கடிந்தெ ரிக்கும் வெயிலிலும்;
கலங்கிப் பெய்யும் மழையிலும்! (நடந்து)

நிலத்தில் துள்ளி வீழ்ந்தமீன்
நீர்க்குள் பாய்ந்து நீந்தல்போல்
நலித்த இரவு கழிந்ததும்;
நகரும் ஞாயி றெழுந்ததும்! (நடந்து)

பொய்பொ றாமை யெனுமுளப்
புழுதி வியர்வை போகவே
மெய்மை நதிக ளாடிமென்
மேலுந் தூய்மை யாகவே (நடந்து)

'பொறுமை' யென்ற பொருளுடன்
'புலமை' யென்ற துணையுடன்
'சிறுமை' யென்ற பிணிகளைச்
சிதற டிக்க எண்ணியே! (நடந்து)

பரந்து வீசுங் காற்றினில்
பரிம ளங்க லந்ததைப்
புரிந்து கொண்ட மதுகரம்
பூவை நாடிப் போதல்போல்! (நடந்து)

தேனை னத்தி கழ்ந்திடும்
செந்த மிழ்நன் னாட்டையே
வானை னத்து லக்கிடும்
வல்ல மைகை கூடவே! (நடந்து)

கடலை நோக்கி யோடுமோர்
கட்டி லாத அருவிபோல்
உடலை யூக்கி, யொளிநிறைத்
துலகை மேம்படுத்தவே (நடந்து)

# உதவிகள்

கருத்தொடு கண்ணைக் கவருமோ ரோவியக்
காட்சியாய் வைகறையை – மிகப்
பொருத்த முடனெனக் காகப் பருதி
புதுக்கியே வைக்கிறது!

ஊருல கத்தினைக் காணவே கானல்விட்
டோடி வருமருவி – என்னைச்
சேர அழைத்துடல் மாசைக் கழுவிச்
சிறக்க விடுகிறது!

தன்னிக ரற்ற தமிழெனும் கன்னி
தனிப்பற்று கொண்டவளாய்ப் – பின்னர்
என்னை யமர்த்தி யமிழ்தினை யூட்ட
இதயம் நிறைகிறது!

பற்றற்ற வானகப் பள்ளியில் பாடும்
பறவை யினங்களெலாம் – இசை
கற்றுத் தெளிந்திட முற்று முதவிக்
களிப்புறச் செய்கிறது!

சிரிப்பு மணமலர் சிந்திடு மென்னருஞ்
செல்வச் செடிகொடிகள் – கலை
விருப்புக் கிணங்கியே மௌன நிலையை
விளக்கிக் கொடுக்கிறது!

குறையென்று கூற எதுவொன்று மற்ற
குவலயத் தில் படுத்தால் – கோல
நிறைமதி யென்னுள் மின்புறப் போர்த்த
நிலவை விரிக்கிறது!

தென்ற லிறுதியாய் வந்துநன் றென்னவே
தேகம் தனைத்தழுவி – கருத்
தொன்ற விரவிக் கவிதை யியற்றி
உதவியும் செய்கிறதே!

# புத்தகம்

எத்தனையோ ஏற்ப இருந்துமிலை யிங்கொருநற்
புத்தகம் போலும் பொருள்.

தத்தம் தருமம், தகுதி – தாமுயர்த்திப்
புத்தகம் நல்கும் புகழ்.

பித்தம் பிடிவாதம் பேதைப் பிணிதீர்க்கும்
வைத்தியன்காண் வாழ்விற் கது.

குத்தும் வழக்கும் குடியழிவு மாய்க்கழியும்
புத்தகம் புல்லார்ப் பொழுது.

புத்தகத்துள் தோய்ந்து புலன்கூர்மை யுற்றவனைச்
சத்தியாயக் காணும் சகம்.

'சொத்து சுகமனைத்தும் சொப்பனமே' என்பவர்க்கும்
புத்தகமே யாகும் புகல்.

புத்தகத்தைப் போற்றிப் புலன்புகுத்தாப் பூதவுடல்
இத்தரைக்கோ ரின்னாச் சுமை.

நித்தமும் புத்தகத்துள் நெஞ்சம் பதிப்பவனை
வித்துவா னாக்கும் விதி.

சித்தத்துள் சீராய்ச் சிறந்ததனைச் சேமித்தோன்
புத்தகமாய்ப் பூப்பான் புறம்.

சத்தியமே சார்பாம் சார்ந்தகருத் தேபாவாம்
புத்தகமே தெய்வம் புவிக்கு.

புத்தகத்தைப் போற்றிப் புதுப்புத் தகமாவேள்
புத்தகம்நா னேபுத் தகம்.

புத்தகமாய் மாறுங்கள் புலவர்காள்! புத்தரைப்போல்,
புத்தகம் பொன் போலும் பொருள்.

# நிறைமொழி

இறைவனின் இன்னருளுக் கென்று முரியோன்
நிறைகுணன் முத்தப்ப னென்றே, முறையாக
நன்னூல்க ளாய்ந்தறியும் நாவலர் தம் மகத்தில்
பொன்னாக வைப்பர் பொதிந்து.

உச்சிப் பொழுதா யுறைவோரு முள்ளத்திற்
கச்சந் தருமிரவே யாவோரும் – மெச்சிடவே
பொய்கை மலரரசி புன்முறுவல் பூத்தளிசெய்
வைகறையாய் வாழ்ந்தா னவன்.

துள்ளிப் பறவாத் துணையன்னப் பார்ப்புறங்கும்
பள்ளிக் கமலப் பழனத்துள் – வெள்ளம்
பெருகிப் பரந்துபயிர் பேணும்தாய் நாட்டுக்
குருகி யுலைந்தா னுளம்!

பன்னிரண்டா மாண்டு பதமாய்ப் பழனமெலாம்
செந்நெல் விளைவறுக்கும் திங்களிலோர் – நன்னூல்
அணிவதில் சூழ்புறத்துக் குன்றேறி யாங்கம்
மணிக்கடலைப் பார்த்தான் மகிழ்ந்து!

பஞ்சு சிதறிப் பரந்து கிடந்ததெனும்
பஞ்சுப் படலத்தி னூடேதன் – நெஞ்சும்
நெகிழ்ந்து நினைவு நிறைவேறிற் றென்றே
மகிழ்ந்தான் மரக்கலம் கண்டு!

காதல் கரைகடக்கக் காத்திருந்த காதலிதன்
நாதன் வரவும் நடுநிசியில் தீதில்லா
தில்லக் கதவுதிறந் தேற்க விருப்பதுபோல்
நல்லவனு மானான் நயந்து.

தாழை மடலில் தவிக்குமிள நாரையைநீர்
கோழி யணைத்துக் குறைதீர்த்து – வாழும்
தடம்பொழில் சார்ந்ததன் தாய்நாடு காணல்
கடனென்றான் கால மறிந்து.

முல்லைப் புறங்கமழ மொய்த்த முகிற்குலங்கள்
மெல்லத் தவழ்ந்துதன் மேலார – நல்லோனும்
வண்ணமலர்த் தாளிறையை வாழ்த்தி வணங்கினான்
கண்மெல்ல மூடிக் கசிந்து.

கன்றுடனே காலி கடுகிப்புல் லார்ந்துவக்கும்
குன்றம்நீத் தூரைக் குறுகியவன் – நின்றதுமே
என்றுமே யில்லாத இன்பத்துள் துன்பமுமொன்
றொன்றிப் புகுந்த துளத்து.

எங்கனம் செல்வே னெழில்மிக்க இவ்விடம்விட்
டெங்கனம்நா னின்னலுறா தேகுவேன்? – எங்கனமிங்
குள்ளம்புண் ணாகா துருகியுகா தூர்செல்வேன்
கள்ளளெனை யாக்கல் கடிந்து!

மயிலாடும் மாட மதில்புறம் சார்ந்த
கயிலாடு மேரிக் கரைமேல் – வெயிலாடும்
தீங்கரும்பின் சாறாய்ச் செவிமடுக்கத் தேமாவின்
பாங்கிருந்து பாடுங் குயில்!

இந்த எழிலிடத்தி லென்னிதயப் பொன்மலர்கள்
சிந்தித் தொடுத்தேன் செண்டுகளாய் – அந்தநெடுங்
குன்றுகளில் வாழும் குழந்தைகளின் நல்வாழ்வுக்
கின்றியமை யாமை யறிந்து.

ஆன அவர்தம்பே ராவ லவமாக
ஊனமின்றி யுள்ளஞ் சுமையின்றி – நானுமினி
யிவ்விடத்தை விட்டேகற் கென்று மியலுவதோ
எவ்விடத்திற் கேனு மிசைந்து.

ஆடையை மாத்திரமே யன்று களைவதுடல்
மூடிய தோலை முழுவதுமே – கூடி
யிருப்பவர்கண் காணுமா றின்றென்கை கொண்டே
வுரிப்பவனு மாவே னுலைந்து.

எண்ணத்தை மாத்திரமே யன்று பிரிந்தின்று
திண்ணமுடன் விட்டினிநான் செல்லுவது – உண்ணப்
பசிவேட்கை கொண்டு பரபரக்கும் நெஞ்சை
விசித்தழவே செல்குவன் விட்டு.

நேயர்தா மென்றும் நிலைத்திருக்கும் பேரன்புத்
தாயர்தாம்! தாங்கும் தனையர்தா – மாயினுமென்
என்னாலுந் தங்கற் கியலாத தால்செல்வேன்
பன்னூறு காதம் படர்ந்து!

அன்னை கடலு மலைக்கரங்கள் தாமரைத்துந்
தன்னை யணுகச் சாற்றுகிறாள் – என்னை?
புறப்படவே வேண்டும், பொழுதுடன்நா னென்றன்
பிறப்பிடம் சேரப் பிரிந்து.

இரவின் சிறிய நாழிகைக ளின்றும்
எரியொத்து வெந்து படினும் – வரையில்
பனியொத் துறைந்து, பளிங்கொத் திறுக்கி
எனைவார்த் தெடுக்கு மினிது!

கொங்குலவுங் குன்றைக் குலவிக் கவினுலவச்
சங்குலவிச் செல்லும் தடங்கரையை – யிங்கிருந்
தென்னே டெடுத்துக் கொண்டேகவே யேங்குகிறேன்
முன்னோடி யாகி முனைந்து.

எடுத்துக்கொண் டேக வியலுவதோர் இன்பம்
வடித்து வடிவளித்த வாயைத்– தொடுத்து
மிதந்தினிய மென்காற்றின் மீதூர்ந்து செல்லும்
இதயங் கனிந்த இசை!

பாடுபட்டு பன்னாள் முயன்று பரவசமாய்க்
கூடுகட்டி வாழ்ந்த குருவியும்தான் – நாடி
வசித்த இடம்விட்டு வண்ணச் சிறகை
விரித்துப் பறத்தல் விதி!

மன்றருகில் தன்னை மறந்து மனமுருகி
நின்றவனும் கண்டான் நெடுந்திசைகள் – நன்றியும்
மன்னும் நகரம் மகிழ்ந்து மாக்கலத்தைத்
துன்னிவர வேற்குந் துறை!

மனத்தை மகிழ்விக்கும் மாலுமிகள்; மற்றும்
தனதருமைத் தாய்நாட்டு மக்கள் – புனிதப்
பணிவகத்துள் வைத்துப் பரபரப்பாய் நின்றார்,
துணிவகத்தில் தோன்றத் துதைந்து.

உள்ளங் கரைய வுணர்வு கரைகடந்த
வெள்ள மெனக்கிளர்ந்து வெளியாக – வள்ளலுமென்
தொன்மைத்தா யீன்றளித்தா தோழர்காள் ளென்றழைத் தான்
உன்மத்தன் போலு முவந்து.

‘சலிப்புடன் சற்றிரவில் சாய்ந்துகண் துஞ்சின்
அலைப்புரவி மீதூர்ந்த வாறே – மலைப்பக்
கனவிலும் வந்து களிப்பித்தீர்! காண
நனவிலும் வந்தீர், நயந்து!

பிரிந்தாலும் துன்பம்; பிரியாமல் மேலு
மிருந்தாலும் துன்ப மெனவே – சரிந்தாலும்
பாய்விரித்தும் பாங்காயப் பயணப் படாக்கலம்போல்
ஓய்வுகுத்தாங் குள்ள துளம்!

‘அமைதி யளிக்கு மழகு மலைக்குன்றை
இமையாது நின்றிறுதி யாகச் – சுமையாய்
அரும்புங்கண் ணீர்சிதறி ஆர்வமுடன் கண்டு
விரும்பநான் கொள்வேன் விடை!

நீலக் கடல்மார்பில் நேச மகவென்னச்
சாலத் தவழும் தனிக்கப்பல் – மாலுமிகாள்!
பின்னேநான் வந்து பிறிதுமொரு மாலுமியாய்
முன்னாகி நிற்பன் முனைந்து.

மென்றுயில் கொள்ளும் விரிகடலே! மேவுமலைக்
குன்றுடைய வூற்றுக்குங் கூடநீ – யென்றும்
உரிமைகொண் டாடி வுரைகின்றா யுன்பால்
பெருமையுடன் சேர்குவன் பின்!

யாரிடமும் பேசா தமைதியா யோடுகிற
நீரோடை கூட நினைத்துருகிப் – பாருடனே
பின்னு மொருதடவை பேசி விடைபெற்று
மன்னுகடல் மேவு மடுத்து!

என்பன சொல்லி யிவன் மெல்லச் செல்லக்கண்
டன்பர்க ளெல்லாரு மங்கங்கே – துன்பமுடன்
நின்று நினைத்துருகி நெட்டுயிர்த்து நேசத்தால்
ஒன்றி யுடைந்தா ருளம்!

கழனிகள்மேல் வைத்த கருத்தழிந்து காண்பான்
விழவணி மூதூரின் மேவி – யுழவரெலாம்
பண்ணைக்குப் பண்ணை பரிந்து விளிப்பதுநம்
கண்ணுக்கோர் காணாக் கவின்.

'அரிய துணைவ ரனைவரையும் விட்டுப்
பிரியும்நாள் பேணும்நா ளாயின் – பெரிதும்
உளங்கவரு மென்மாலைப் போதே வுவக்கு
மிளங்காலை யாயிற் றெனக்கு!

கொத்தாகிக் காய்த்துக் குலுங்குமோ என்னுள்ள
முத்தமர்கட் கெல்லா முவந்தீய – இத்தினத்தில்
ஏரை யிடையி லிருத்திவரு வோர்தேவை
தீரநா னீவ தேவை?

பெருமழை தம்மீது பெய்ததெனப் பேச
அரும்பும் வியர்வையர்தா மாகி – வரம்பில்
கரும்புத் திரிகை களமிருத்தி வந்தோர்
விரும்பநா னீவ தேவை?

மனக்குடங்க ளெல்லாம் மடுத்து மறிய
எனக்குடன் பட்டென் னிதயம் – இனிக்கவொரு
வற்றாத வூற்றாய்ச் சுரந்து வழங்கிடுமோ
வுற்றார் முகக்க வுவந்து?

வல்லா னொருவன்தன் வாய்வைத் திசைக்குமொரு
புல்லாங் குழலினைப் போல்வேனோ? – அல்லவெனில்
காதாரப் பெய்து களிப்பிக்கும் யாழேயோ
யாதா யமைகுவன் யான்?

நீடிய குன்றின் நிலைத்தசிக ரத்திருந்து
நாடினேன் நான்மௌன நன்னிலைமை – நாடி
நனியினிய நல்லதெதைக் கண்டெடுத் தேன்நானே
இனியதனை வேண்டா மெனற்கு!

இதுவென் வினைவறுக்கும் நாளாயி னிங்கே
விதியா யுழுது விதைத்தேன் – அதுவும்
எருவைத்து நீரிறைத் தேமுற்றாங் கெந்தப்
பருவத்தில் செய்தேன் பயிர்?

இதுவென் விளக்குயர்த்தும் நாளாயி னிங்கே
புதியவொளி புகுந்த போதும் – அதிலே
எரிவதா மென்சுடரன் றெண்ணெயென தன்றிவ்
வீரவினிலே யேற்றுவேன் நான்!

இரவினது காவலனே யென்னையும் பார்த்துத்
திரியிட்டுச் சாலத் திகழ – எரியிட்டு
விண்ணில் சுடரும் விளக்காக்கி வைத்தினிய
தண்ணொளியுந் தந்தருளா வான்!

இவ்வளவும் வாய்விட் டியம்பியவை, இன்னுமவன்
எவ்வளவோ நெஞ்சி லிருத்தியவை – அவ்வளவும்
சீராகச் சிந்தித்துச் சேர்த்துவந்து பேணினவை
யாராலு மாயா தவை!

நல்லோனும் பின்பு நகரத்துக் குள்வரவும்
எல்லாருங் கூடி யெதிர்கொள்ளப் – புல்லி
ஒரேஎ குரலி லுரைத்தார் களோடிச்
சரேஎ லெனவந்து சார்ந்து:

'எங்களைவிட் டேகவே வேண்டாங்கா ணெங்களது
மங்கிய மாலை மயக்கத்தில் – இங்கிதம்சேர்
உச்சிப் பொழுதா யுறைந்தீ ருமதுரைகள்
கச்சிதம்யாம் கண்ட கனவு.

நீங்க ளெமக்கயலா ரன்றே, நினைத்தென்றும்
நாங்கள் வழிபடும் நல்லரசாண்ட ஏங்கியினி
உங்கள் திருமுகத்தை யுன்னி யுருக்குலைய
எங்களைவிட் டேகா திரும்!

தாழ்ந்த குரலில் தாயனையர் தாமுரைத்தார்;
ஆழ்ந்தகடல் நம்மைப் பிரிப்பதோ? – வாழ்ந்தநாள்
வெற்றுநினை வாக விடுவதோ, வெம்புவதோ
எற்றைக்கும் ஏலா தினி!

அல்லும் பகலும் மனவரத மெங்களுடன்
இல்லுறையும் தேவா யியங்கினீர்! – சொல்லின்
உமதுநிழ லெங்க ளுறையுட் கொளியா
யமைய மகிழ்ந்தோ மகம்!

உத்தமரே! யும்மை யுயிர்போ லுளத்துன்னி
மெத்த விழைந்தின்று மேவினோம்; – ஒத்த
உரையாற்றே மாகவெம் முள்ளத்தை மூடித்
திரையேற்றி வைத்தோம் தினம்!

ஆயினுமின் றும்மை யழைக்கின்ற தன்புடனே
தாயினும் சாலத் தவிக்குமுளம் – சேயெனவே
ஆரா விருப்ப மகத்தின் வெளிப்போந்து
நேராக வந்து நெகிழ்ந்து.

தொன்றுதொட் டுட்கிடக்கை தோன்று மியல்பிதுவோ!
ஒன்றிப் படிந்திருந் துள்ளத்தி – லின்று
பிரிவென்ற போதெ பெரிதும் வெளிப்போந்
துரியவரை யூக்க லுடைத்து!

வேறு பலரும் விரைந்தங்கு வந்தவராய்க்
கூறுவது கேட்டுக்கை கூப்பியே – ஏறனையோன்
மாறாகக் கூடி மனமின்றிக் கண்ணில்நீர்
ஆறாக விட்டா னழுது!

பின்னே அவனும், பெருமக்க ளும்கோவில்
முன்னே யமைந்தவெழில் முற்றத்தை – 'அன்னோ' யென்
றேங்கும் குரலி லுருகி யழைத்தவ ராய்ப்
பாங்குடன் சேர்ந்தார் பரிந்து.

கோவிலுக் குள்ளிருந்து வந்தாள் குவலயமே
ஆவலுடன் போற்று மலமம்மா! – தேவதைபோல்
முக்கால மோர்ந்துரைக்கும் மூதாட்டி, முத்தமிழை
யெக்காலு மாய்வா ணிருந்து.

அவளை யவனு மயராத வன்போ
டுவகைமிக நோக்கினா னொன்றி – யவனை
நுணுகி யறிந்து நுவன்றாள் முதலி
லணுகினவ ளாவா ளவள்.

'இப்பொழுதும் சிந்தனையில் மூழ்கி முழுவதுஉம்
அப்பழுக்கற் றாய்ந்துரைக்கு மாசானே! இப்பொழுதும்
எத்தும்தாய் நாட்டுக் கெடுத்தேக வந்ததுநீர்
காத்திருந்து பார்த்த கலம்!

சொந்த வுறைவிடத்தைச் சுற்றி யலமந்த
சிந்தனைகள் தேங்கும் திருநாட்டை – முந்தி
அடைய விழைகின்றீ ராழ்ந்தவெம் மன்பும்
தடையாக நிற்கா தினி!

ஆயினு மீதொன்றை யாவலுடன் கேட்கின்றோம்
தேயத்தை நீத்தினிநீர் செல்லும்முன் – நேயத்தால்
உங்கள் திருவுள்ளத் துள்ளுறையு முண்மைகளை
எங்கட்குச் சொல்வீ ரெடுத்து!

அதைநாங்க ளெங்களது மக்களுக் கன்புப்
புதைபொருளாய்ப் போற்றிப் புகல்வேம் – அதையவர்கள்
தங்களது மக்கட்குத் தாமுரைக்க அங்கனமஃ
தெங்கும் வழங்கு மிருந்து!

உமது தனிமையில் கண்டீ ருளதாம்
எமதுவாழ் நாளி னியல்பை – யுமது
விழிப்பினில் கேட்டீர் விளங்காவெம் வேட்கை
எழுப்பு மிதயத் தொலி!

இறப்புக்கு மேற்ற பிறப்புக்கு மூடே
சிறப்பிக்க வுள்ளதனைச் செப்பிக் - குறிப்பாகக்
கங்கு லகற்றும் கவின்விளக்காய்க் காட்டுங்கள்
எங்களை யெங்கட் கெடுத்து!

'சதுரரும், சாந்தரும், சத்தியரும் சார்ந்து
மதுர முறவுறையும் மக்காள்! - இதரவும்
என்ன விருக்கு மியம்பிடுதற் கிங்கேநீர்
உன்னியதொன் றன்றி யுளத்து?'

அப்பொழுது சொன்னா ளலமம்மாள்; அன்புபற்றி
யிப் பொழுது சொல்வீ ரெமக்கென்றே - ஒப்பெழுத
ஒன்றுமே யின்றி யுரைப்பான் தலைநிமிர்ந்தான்
நின்றமைதி யாக நினைத்து.

அன்புறுத்தி நோக்கி யழைக்கி னதனுடனே
இன்புறுத்தி யூக்கிவிரைந் தேகுங்கள் - துன்புறுத்திச்
செல்லும் வழிமுழுதும் செங்குத்தாய்ச் சீர்க்குங்கால்
கல்லும்முள் ளேனும் கடந்து!

வதனம் மலர்ந்து வயப்படுங்கள், வாய்த்த
அதன்சிறகு கள்ளணைக்க நேரின் - உதிரம்
பெருகவே லம்புகளும் பேதுறவே நெஞ்சி
லுருவத்தைத் தாலு முவந்து.

உங்களை நாடி யுரையாடு மன்புக்குச்
செங்கைகள் சேர்த்துச் செவிகொடுங்கள் - யங்கமுறப்
பூங்காவை வாடை புடைப்பது போல் பூரணமாய்த்
தீங்காகு மேனும் தெளிந்து.

அன்புமுடி சூட்டி ஆள அமைப்பதுபோல்
துன்பக் கொடுமையும் தோற்றுவிக்கும் – இன்பமும்
தொட்டு வளர்த்ததுபோல், தோண்டி யடியோடு
வெட்டவும் செய்யும் விழைந்து!

பதரகலத் தூற்றிப் பதமா யுலர்த்திக்
குதிருரலிற் பெய்தொளிரக் குற்றும்; – அதிரப்
புடைத்துப் புறம்போக்கும்; போற்றியே வாரி
யிடித்துமா வாக்கு மெடுத்து.

மென்மையுற வுங்களை மேலும் பிசைந்தினிய
தன்மையுறத் தட்டித் தணலிட்டு – நன்மையுற
தூய விருந்தாய்த் துலங்கவே செய்விக்கும்
ஆய இறைவற் கமுது!

உங்களது நல்லுள்ளத் துண்மைகளை நீங்களே
உங்கட் குணர்த்தி யுவந்திடவே – உங்களை
உய்விக்க வந்த வுரிமைசால் பேரன்பு
செய்விக்கும் மாற்ற மிவை!

அச்சங் கருதி யமைதியை மாத்திரமே
நச்சிடுவீ ராயின் நனிவிரைந்து – நிச்சயமாய்
போரடிக்கும் போதே புறம்போந் தொழியுங்கள்
பாரிடுக்கில் வித்தாய்ப் படிந்து.

என்ன கொடுத்தாலு மென்னதான் கொண்டாலும்
தன்னையே தான்கொடுத்துத் தன்னிடமே தான் கொள்ளும்
மன்னுங் குணங்கொண்டு மாண்புறும் மாநிலத்து
ளன்னதா மன்பி னியல்பு.

ஆன பிறவொன்றை யண்டிப் பணியாது;
தானும் பிறவொன்றைத் தாழ்த்தாதஃ – தேனென்றாள்
இன்பமும் துன்பமு மென்னா வியல்புடைய
அன்பினுக் கன்பே அடைவு.

இறைவனுள னென்னுள்ளத் தென்னாது நானே
இறைவ னுளத்துள்ளே னென்மின் – இறைவனின்
நீங்காத அன்பை நிகழ்த்துங்கால் நீங்களின்
ஓங்குங் குரலி லுவந்து.

அன்பின் வழியை யடுத்தவழிக் குத்திருப்ப
லென்ப தியலா தெவராலும் – மன்பதைக்குள்
தக்கோ னெனக்கண்டால் தன்வழிக்குத் தான்திரும்பும்
மிக்கோரின் மேலும் மிகுத்து.

தன்னையே தானடைவ தன்றிமற் றன்பினுக்
கென்னபிற வாசையு மில்லைமன் – பின்னையும்
வேறுசில வாசைகள் வேண்டி னவைகளுமிவ்
வாறமையக் கூடு மடுத்து.

உருகி யிரவுக் கிசைபாடி யோடும்
பெருகு புனலாகிப் பேணத் – துருவி
அளவிறந்த மென்மைத் துயரறிய; வாங்கறிய
வுளமறிந் தூக்கு முணர்வு!

குறுகு மினிய வைகறையில் கோதிச்
சிறகடித்துக் கண்விழித்த சிந்தை – பிறகும்
பிறிதுமொரு நந்நாளைப் பெற்றபல னாக
மறவாது கூறமுக மன்!

தண்பொழில் சார்ந்து தனித்துத் தணியாத
நண்பகலுக் கோய்ந்திருந்து, நல்லன்பின் - பண்புகளில்
ஆராத வின்ப வமுதருந்தி யாராயச்
சீராகக் குந்தச் சிறிது!...

என்பன சொல்ல விதயங் குளிர்ந்தவர்கள்
இன்பம் பெருகவெழுந் தெல்லாரும் - அன்புடனே
கேட்டறி யாதனவும் கேட்டுவந்தோ மென்றுரைத்துத்
தாட்டுணையில் வைத்தார் தலை!

*(கருத்து : கலீல் ஜிப்ரான்)*

# அமைதி

ஆசை யெனும்பணப் பாசத் திரையை
யகற்ற இக்கண மேயெழு! – அவமாய்ப்
பேசும் பேச்சில்நம் நேசம் போச்செனில்
பெரிது மதுநமக் கேவழு!

தினமும் நெஞ்சினைத் தேச நலமெனும்
தெளிந்த நீரினிற் கழுவியே – தீரத்
'தனது தா'னெனும் மாசு மறுவுகள்
தங்கி டாதுநன் கொழுகியே,

தூய நினைவெனும் கோயில் தனிலறி
வுச்சு டர்விளக் கேற்றியும் – தோன்றி
ஆயு மிரவிலும் பகலி லும்மத
ணைந்தி டாதுகாப் பாற்றியும்,

பெருசு சிறுசெனும் சாதி மதஇன
பேத மின்றி யிணங்கியே – பேணும்
அரசு மாண்டியும் சரிச மானமா
யங்கி ருந்து வணங்கியே,

பெருகும் நதியினில் தவறி வீழ்ந்துயிர்
பெற்றெ ழுந்தவர் போலவே – 'பேறெ'ன்
றுருகி நிற்குமந் நிலையில் காண்பரங்
குள்ள யாவரும் சாலவே!

அரிய மலர்மய மாயு யர்ந்தநல்
லன்பெ னும்அரி யாசனம் – அதிலே
உரிய அருளுரு வாய மர்ந்துவப்
பானன் றுண்மையா மீசனும்!

துறைகள் பற்பல வாய்வி ரிந்தநம்
தூய செந்தமிழ் நாட்டிலே – மக்கள்
பிறவி பெற்றவர் பெறுவ ரத்தினம்
பெரிது மமதியை வீட்டிலே!

# துறவறம்

தனிமை தான்தவமாம் – தவிர்க்காத்
தன்மை சிலவமைந்தால்
இனிமை யிதிலுண்டாம்! – இருமைக்
கின்ப மிதிலு ண்டாம்!

ஒப்பு யர்வெல்லா – முள்ள
ஒழுக்க மிதுவொன்று,
அப்ப முக்கில்லா – துள்ள
அன்னை யனையதுவாம்!

ஈன மென்பவெலா – மில்லா
தேற்றம் தருகின்ற
ஞான மிதுவொன்று, – நமக்கு
நல்ல தந்தையுமாம்!

கடனெ னக்கொண்டு – காட்டும்
கருணை யிதுவொன்று,
உடன்பி றப்பெனவே – உலகில்
உதவ வுறுந்து ணையாம்!

நீதி நெறிநீங்கா – நெஞ்சம்
நிறைந்த சொல்லொன்று,
காதல் மனைவியெனக் – கடுகிக்
கைகொ டுத்திடுமாம்!

சின்னஞ் சிறுமதியால் – சேர்ந்தார்
செய்யும் சிறுமைகளை
மன்னிப் பதுவொன்று – மறுக்கா
மகனெ னத்தகுமாம்!

தனிமைத் தவம்புரியத் – தலையாம்
தன்மை களைத் தாங்கி
மனம்பொ ருந்திநனி – மதிக்கும்
மனித னாவதுவே!

# நிலைபேறு

'ஆண்டவ' னெனஇனி வேண்டிய தெதுவோ?
அன்னையை மகவினைப் பின்னிய தெதுவோ?
ஈண்டுமெய் யறிவினைத் தூண்டுவ தெதுவோ?
என்பிறப் பினித்திடற் கினிமருந் தெதுவோ?

அதைப் பெறுவதற்கினி
ஆசையு றேனோ!
அதைப்பெறு வதற்கினி
ஆசையு றேனோ!

துன்பமென் பதையெது துடைத்திடற் காமோ?
தூய்மையும் வாய்மையு மெதற்குற வாமோ?
இன்பமென் பதையெது படைத்திடற் காமோ?
இன்மையி லமைதியை யிணைப்ப தெதாமோ?

அதைப்பெறு வதற்கினி
ஆசையு றேனோ!
அதைப்பெறு வதற்கினி
ஆசையு றேனோ!

சத்தியிவ் வுலகினில் சாற்றிய தெதுவோ?
சமரச நெறிமுறை போற்றிய தெதுவோ?
சித்திரைச் சிந்தையி லேற்றுவ தெதுவோ?
சீவனைத் தேவனாய் மாற்றுவ தெதுவோ?

அதைப்பெறு வதற்கினி
ஆசையு றேனோ!
அதைப்பெறு வதற்கினி
ஆசையு றேனோ!

# இளைஞர்

தெளிவுடைய கல்வியும் கேள்வியும் மேலான
செயல்களில் தெம்புடையையும்
தேசபக் தியுமினிய சொற்களுடன் நகைமுகமும்
தேவைகளில் மிதமும் நல்ல
வளமுடைய தேகமும் வாதுசூ தில்லாத
வாக்குங் கூர் மதிவன்மையும்
வழிதவரி நடவாத திடமனதும் பெரியோரா
வழிபடும் வழக்குடையையும்
களவுகர் வங்கோபம் காலம்வீ ணாக்குதல்
கள்கயமை யாதியற்ற
கலையார்வ மொடுங்கல கலப்பான தேகக்
கட்டழகும் வாய்த்திருக்கும்
இளைஞர்களை ஈன்றநன் னாட்டினு
இன்னலுண் டாவதில்லை
என்பதனை யின்றுமக் கன்போடு ரைக்கிறேன்
இவ்வுலகு தானறியவே.

# இல்லறம்

பல்வேறு தொழில்களில் எதையேனு மொன்றிளம்
            பருவத்தில் நன்கு பழகி
பலரும்வி ரும்பும்விதம் நாடோறுந் தவராமல்
            பாங்காக வே புரிந்து
சொல்வேறு செய்யுங் தொழில்வேறு பட்டவர்
            தொடர்புவே ரோடறுத்துச்
சுதந்திரத் திற்கென்றுந் துளிபங்கம் நேராமல்
            சுயசிரம சீவியாகி
புல்வேறு நெல்வேறு தானெனினும் பாத்தியுள்
            பொருந்தியவை வாழ்வதே போல்
பொதுவாக அனைவரையுஞ் சுயமாகப் பாவித்துப்
            புகழ்நனி பொருந்தும் விதமாய்
இல்வேறு கொண்டுதன் மனைவியுடன் இன்பமாய்
            இருப்பதின் பெயர் இல்லறம்
என்பதனை இன்றுமக் கன்போடு ரைக்கிறேன்
            இவ்வுலகு தானறியவே.

# காலத்தின் அருமை

மனிதனென என்னுடைய இனமாக நீயிந்த
மண்மேற் பிறந்திருந்தும்
மகிழ்ச்சியே இல்லாமல் இகழ்ச்சியாய் எல்லோரும்
மனம் வந்த வாறு பேச
இனிதெனும் புனிதவுண வாடைமனை யாதிபொருள்
எதுவொன்றும் எண்ணாமலே
என்னேரம் பார்த்தாலும் புத்தகமுங் கையுமாய்
இருந்தின்ன செற்றாயெனத்
தனதுமனம் இரங்கியொரு தனவந்தன் பெருஞ்செல்வம்
தந்துசுகி யென்றபோதும்
தலையாய இனியதமிழ் கலைபேணி வளர்க்காமல்
தன்னலங் கருது வோனாய்
எனதுவாழ் நாளிலொரு நாழிகையும் வீணாக
என்றுங் கழிக்க மாட்டேன்
என்பதனை இன்றுமக் கன்போடு ரைக்கிறேன்
இவ்வுலகு தானறியவே.

# அரியபொருள்

அரிதினும் அரிதான பொருள்பூமி யொன்றுதான்
என்றனைவ ரும் பகருவார்
அதைக்காட்டி லும்நல்ல பொருள் கல்வியென்றுசிலர்
அதைமறுத் துப் பேசுவார்
தருதிரென் றிருகையும் ஏந்தியிரம் போர்க்கெலாம்
தன்மன முவந்து வாரித்
தருவதால் வருங் கீர்த்தி தான்பொருள் யாவினு
தலையான தென்பர் தக்கோர்
பெரிதும் நான் ஆராய்ந்து பார்த்த அளவில்
பெரியோரைக் கேட்ட அளவில்
பெருமையுஞ் சிறுமையுங் கருதாமல் உண்மையே
பேசும்பரி சுத்தமான
இருதயத் தைப்போலும் அரியபொருள் பிறிதொன்
றிருப்பதாய்த் தெரியவில்லை
என்பதனை இன்றுமக் கன்போடு ரைக்கிறேன்
இவ்வுலகு தானறியவே.



காலத்தின் அடையாளம்
கவிஞர் வெள்ளியங்காட்டான்.
பாரதியின் வாழ்வியல்
கூறுகளின் தொடர்ச்சியைக்
கவிஞரிடமும் காணமுடிகிறது.
வார்த்தைக்கும்-வாழ்க்கைக்கும்
இடைவெளியின்றி வாழ்தலில்
போராடியவர்.
கவிஞரின் பன்முகப் படைப்புகளின்
ஒளிவட்டமாய் கவியகம்......

- கவிஞர் தங்க. முருகேசன்